புங்குடுதீவு மேற்கு - அரியநாயகன்புலம்

# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்



# மகா கும்பாபிஷேக மலர்

1989

உங்களது நயம் நம்பிக்கை

## தங்க வைர நகைகளுக்கு

நாணயமுள்ள சிறந்த ஸ்தாபனம்



ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

## தங்கப்பவுண் நகை வியாபாரம்

74/1, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24846

உ
சிவமயம்

புங்குடுதீவு மேற்கு, இறுப்பிட்டி

# அரியநாயகன்புலம்

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய

# மகா கும்பாபிஷேக மலர்



விபவ ௵ தை ௴ 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**10-02-1989**

*(மண்டலாபிஷேக பூர்த்தி வெளியீடு)*



## மலர்
## வெளியீட்டுக்குழுவினர்

திரு. கா. குகபாலன்

திரு. ந. பேரின்பநாதன்

திரு. ஐ. பரமேஸ்வரன்

செல்வன். ந. சண்முகநாதன்

செல்வன். சு. கோகிலதாசன்

செல்வன். ம. மதியழகன்

# உள்ளே...

1. ஆசியுரை
- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் 1
- பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்கள் 2
- துர்க்கா துரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 3
- திரு. நா. சிவராமமுருகன் அவர்கள் 4

2. வாழ்த்துரை
- பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் 5
- திரு. கி. கதிரவேலு அவர்கள் 7

3. தோத்திரம் செய்யவருள்வாய்
கவிஞர். க. நாகலிங்கம்

4. கும்பாபிஷேக தத்துவார்த்தம் 8
ஸ்ரீ இரகுநாதக்குருக்கள்

5. இந்து வழிபாட்டு முறைகள் - வைதிக மரபும் ஆகம மரபும் 13
பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்

6. இலங்கையில் சைவசமயமும் மக்களும் 18
திரு. கா. குகபாலன்

7. விநாயகர் விசுவரூபம் 24
வித்துவான். பொன். அ. கனகசபை

8. மணிவாசகரின் தாயும் சேயும் 27
பேராசிரியர். அ. சண்முகதாஸ்

9. திருக்கோயில் வழிபாட்டில் சிறப்புப்பெறும் மூர்த்தி தல தீர்த்த மரபு 31
கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணன்

10. முரண்பட்ட கணபதியின் உடன்பட்ட கருணை 35
புலவர். ஈழத்துச் சிவானந்தன்

11. கணபதி வழிபாட்டு நெறி 38
திருமதி சந்திரலேகா வாமதேவா

12. கிறீஸ்து தசாப்தத்திற்குமுன் ஈழத்தில் வாழ்ந்த பிராமணக்குலங்கள் பற்றிய கல்வெட்டுச்சான்றுகள் 50
கலாநிதி. சி. க. சிற்றம்பலம்

13. உலகை வலம்வந்த விநாயகர் 56
திரு. எம். வேதநாதன்

14. தெய்வ சேவையே தேச சேவை 59
செல்வன். கே. ரி. கணேசன்

15. அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வளர்ச்சி - ஓர் நோக்கு 61
செல்வன். ந. சண்முகநாதன்

16. நன்றியுரை 63

17. உதவிய உள்ளங்களுக்கு... 64

உ

சிவமயம்



''ஊரகத்தில் வாழ்வுதரும் வீரகத்தி விநாயகனே போற்றி''

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம்
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரண

# கும்பாபிஷேகக் குழுவும் அறங்காவலர் சபையும்

## கும்பாபிஷேகக் குழு

காப்பாளர்கள்: திரு, ஆ, பொன்னம்பலம்
திரு. நா, சிவராமகுகன்

தலைவர் : திரு. கி. கதிரவேலு

உப தலைவர் : திரு. க. திருலோகநாதன்

செயலாளர் : திரு, சு, செல்லத்துரை

தனாதிகாரி : திரு. த. தவராசா

குழு உறுப்பினர்கள் :

திரு. ச. தனபாலசிங்கம்
திரு ஐ கணேசன்
திரு. அ சோதிலிங்கம்
திரு. சு. சிவரெத்தினம்
திரு. து. சுந்தரலிங்கம்
திரு. த. சிவபாதசுந்தரம்
திரு. ந கோபாலகிருஷ்ணன்
திரு. ச. விபுலானந்தன்
திரு. வி. சத்தியசீலன்
திரு. அ. சுந்தரலிங்கம்
திரு. க. பரராசசிங்கம்
திரு. ப. ஜெயலிங்கம்
திரு. நா, செல்லையா
திரு. வே. செ. சுப்பிரமணியம்
திரு. வே. நாகமணி
திருமதி அ. துரைச்சாமி

## அறங்காவலர் சபை:

தலைவர் : திரு. நா. சிவராமகுகன்

உப தலைவர் : திரு. சி. சசிகாந்தன்

செயலாளர் ; திரு. சு. செல்லத்துரை

உபசெயலாளர்: திரு. ஐ. பரமேஸ்வரன்

தனாதிகாரி : திரு. த. தவராசா

கணக்குப்பரிசோதகர்:
திரு. சோ. நாகரெத்தினம்

குழு உறுப்பினர்கள்:

திரு. க. முத்துத்தம்பி
திரு. ஆ. சுந்தரலிங்கம்
திரு. நா. அம்பலவாணர்
திரு. ந. கனகசபை
திரு. தி. மதியாபரணம்
திரு. பொ. சுப்பிரமணியம்
திரு. க. தம்பிஐயா
திரு. க. அருணகிரி
திரு. மு. பொன்னையா
திரு. பொ. கனகசபை

போஷகர் : ஸ்ரீ.தி. இரகுநாதக் குருக்கள்

உ
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

சைவ மெய்யன்பர்களே,

பொன்கொடுதீவு, அரியநாயகன்புலம், அருள்மிகு ஸ்ரீ **வீரகத்திவிநாயகர்** ஆலய மஹாகும்பாபிஷேகம், செவ்வனே ஒரு குறையுமின்றி நிறைவுற்றதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம். மற்றும் சாதாரண ஆலய விழாக்கள் போல் அல்லாது பன்னிரண்டு வருடங்கட்கு ஒருமுறை எடுக்கப்படும் பெரு விழாவானதிறல் விழுப்புறு மேன்மையுடைத்து அடியார்களின் தரிசனத்துக்கு அரியதொரு சந்தர்ப்பமுமாகும். கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணியம். புண்ணியப் பேறுடையோர்க்கே காணக்கிடைக்கும் திருக்காட்சியாகும். விநாயகப்பெருமானின் பிரணவசொரூப தத்துவங்களையும், அருமை, பெருமைகளையும் எழுத்தில் வடிக்கப்புகின் மிக விரியும். மனமுருகிச் சரண் அடைந்தோரின், பழவினைகளையும், விக்கினங்களையும் வேரோடு அறுத்துக் காத்தருளுபவரும், தனக்குவமை இல்லாத தலைவனுன விநாயகப்பெருமானுக்கு எடுக்கும் விழாக்களின் மகிமை சொல்லுந்தரமன்று. இப்புண்ணிய கைங்கரியத்துக்கு இயன்ற ஆக்கமும், ஊக்கமுமளித்து பலவகையாலும் தொண்டுகள் புரிந்த அன்பர்களையும், சிவாச்சாரிய பெருமக்களையும் சிற்பவிற்பன்னர்களையும் அறங்காவலர்களையும் பாராட்டி விநாயகப்பெருமானின் பொன்னுர் திருவடிகளைத் தியானித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

– ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசார்ய ஸ்வாமிகள்

# பேராசிரியர் கா. கைலாசநாத குருக்கள்

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் பஞ்சவிம்சதி குண்ட மஹாயாகம் அமைத்து விமரிசையாகச் சமீபத்தில் நிறைவேறியது பெருமகிழ்ச்சிக்குரியது.

ஆலய பரிபாலன சபையினர், குறிப்பாக கும்பாபிஷேக குழுவினர் மண்டலாபிஷேக பூர்த்தியன்று சைவநறுமணம் கமழும் மலரொன்றை, கும்பாபிஷேக மலரை விநாயகப்பெருமானின் திருவடிகளில் சமர்ப்பிக்க இருக்கிறார்கள். இவ்வாறு தப்பாமல் பூக்கொண்டு விநாயகப் பெருமான் பாதமலர்களை அணுகுபவருக்கு,

''வாக்குண்டாம்
மாமலராள் நோக்குண்டாம்
மேனி நுடங்காது''

என்பது ஔவைப் பிராட்டியின் பொன்மொழி.

இம் மொழிக்கேற்ப இம் மலரைச் சமர்ப்பிக்கக் காரணமாயிருக்கும் நாட்டு மக்கள் அனைவருக்கும் விநாயகப் பெருமான் திருவருளால், கல்வியறிவு பெருகியும் லக்ஷ்மி கடாக்ஷம் சிறிதும் குறைவின்றி ஏற்பட்டும், உடல்வலிமை, எனவே அது ஓங்கி விளங்கும் பொழுது காணும் நோயின்மை எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் ஆற்றல் ஆகியன ஓங்கி வளரும் என்பது எம் ஆன்றோர் அநுபவரீதியாக உணர்ந்த உண்மை.

எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் திருவருளால் கும்பாபிஷேக மலர் நறுமணம் வீசி வாடாமலராய் என்றும் விளங்குவதாக.

கா. கைலாசநாத குருக்கள்

துர்க்கா துரந்தரி

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

சைவப் பண்பாட்டிலும் திருக்கோயிற் பரிபாலனத்திலும் சிறந்து விளங்கும் இடமாக விளங்குவது புங்குடுதீவு. சிவனுக்கும் அம்பாளுக்கும் விநாயகனுக்கும், முருகனுக்கும், கண்ணகித்தேவிக்கும் தனித்தனி பெருங்கோயில்கள் இங்கு உண்டு. தீவின் ஒரு கடலோரத்தை அழகு செய்வது அரியநாயகன்புலம் விநாயகராலயம். கடந்த காலங்களில் இவ்வாலயத்துக்குப் பல தடவைகளில் சென்று உரையாற்றிய வாய்ப்பு எனக்கு உண்டு. கடந்த கும்பாபிஷேகம் நடைபெற்ற போது அமரர் சிவஸ்ரீ கயிலாசநாதக்குருக்கள் (நயினை) தலைமையில் அடியேன் பொன்னுடை பெற்று கௌரவம் பெற்றேன். இன்றும் இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் 10.2.89ல் நடைபெற்று தற்போது தொடர்ந்து மண்டலாபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவது மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும். பக்திச் சிறப்பும் பண்பாட்டுச் சிறப்பும் சைவ அபிமானமும் கொண்டவர்கள் இவ்வாலய பரிபாலனக் குழுவினர்கள் அயரா உழைப்பினுல் ஆத்மீகப்பணிகளை நிறைவேற்றி ஆனந்தம் காண்பவர்கள். திருமுறைகளுக்கும் சைவப் பிரமுகர்களுக்கும் மதிப்புக் கொடுப்பவர்கள்.

ஆகவே வீரகத்தி விநாயகப்பெருமானின் அருட்பெருங் கருணையினுல் வளைக்கப்பட்ட இவ்வூர் மக்களுக்கு மேலும் மேலும் நல்லருள் கிடைத்து சுபீட்சவாழ்வு கிடைக்க வழி பிறக்க வேண்டுமென்று பிரார்த்தித்து அனைவர்க்கும் எமது உளம் நிறைந்த வாழ்த்துக்கூறி அமைகின்றேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.

அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
அறங்காவலர் சபைத்தலைவர்

# திரு. நா. சிவராமகுகன்

அவர்கள் வழங்கிய

## ஆசிச்செய்தி

உச்சியின் மகுட மின்ன
    ஒளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை
    மணி கொள் கிம்புரிவயங்க
மெய்ச் செவிக்கவரி தூங்க
    வேழமா முகம் கொண்டுற்ற
கச்சியின் விகட சக்கர
    கணபதிக் கன்பு செய்வாம்.

இன்றைய சூழ்நிலையில் விநாயகப் பெருமானது ஆலயத்தை புனருத்தாரணம் செய்தும், புதுப்பித்தும் கும்பாபிஷேகத்தை செய்து முடிப்போம் என எவரும் எண்ணாத வேளையில் பாலஸ்தாபனம் செய்து ஆறுமாதத்திற்குள்ளேயே பல திருப்பணி வேலைகளை நிறைவேற்றி, கும்பாபிஷேகத்தையும் வெகு சிறப்பாகச் செய்து முடித்து, சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிடும் தருணத்தில் இருப்பதை எண்ணும் போது மகிழ்வடைகின்றேன். இவற்றுக்கெல்லாம் மூலகாரணம் எமக்குள்ளேயே இருந்து எம்மையெல்லாம் இயக்கி வழிநடத்திய விநாயகப்பெருமானின் அருள் வல்லமையன்றி வேறொன்றுமில்லை.

விநாயகப்பெருமான் பக்தர்களுக்கு அருட் பேற்றினை வழங்கவும் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற முதுமொழிக்கொப்ப சைவமும் தமிழும் அகில உலகமெங்கும் தழைத்தோங்கவும் ஆன்மாக்கள் அருள்பெறும் பேற்றினைப் பெற்று ஆனந்தக் கடலில் மூழ்க விநாயகப்பெருமான் அருள்புரிவாராக என ஆசிகூறுகின்றேன்.

சுபம்!

நா. சிவராமகுகன்

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர்*

# திரு. வி. சிவசாமி

### அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

**ஞானமுதல்வன் விநாயகன்**

வேதம் எனில் பேரறிவு' அல்லது 'மிகப் பெரிய ஞானம்' எனப் பொருள்படும். இப்பேரறிவு ஒருவனின் உலக வாழ்க்கையை நன்னெறிப்படுத்தி, பண்படுத்தி அழியாப் பேரானந்த வாழ்விற்குட்படுத்தும். இந்துக்களின் புனித நூல்களான நால் வேதங்கள் அல்லது நான்மறைகளின் முடிவான பரம்பொருளாக விளங்கும் இறைவன் ஒருவனேயாயினும், அவன் பல்வேறு வடிவங்கள் தாங்கி ஆன்மாக்களை ஆட்கொண்டு ஈடேற்றுகிறான். சைவசமயத்தவர்களின் முழுமுதற் கடவுளாம் சிவபிரானின் மூத்ததிருக்குமாரனும், தனக்கு மேலான தலைவனொருவனில்லாதவனுமாகிய விநாயகப்பெருமான் வேதங்களின் முதல்வனாக மட்டுமன்றி, இடையிலும், முடிவிலும் முன்னிற்கிறான். வேதங்களின் சாரமாக விளங்கும் ஓங்காரம் பிரணவவடிவினன். அப்பெருமான் அன்புவடிவானவனாய் அனைத்து ஆன்மாக்களையும் ஈடேற்றும் வகையில் ஐந்தொழில் புரிந்து கொண்டிருக்கிறான். அவன் பிரமச்சாரியாக உள்ளான் என ஒரு சாரார் கூறினும், தந்தை போலச் சக்தியுடனும் காட்சியளிக்கிறான். அன்பு அல்லது காதல் எனப் பொருள்படும் வல்லபாவினைத் தனது சக்தியாகக் கொண்டு ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கின்றான். இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டி தத்துவத்தினை விளக்கும் வகையி இறைவனை இறைவியுடன் சேர்த்துக் கூறுதல் மரபே. எனவே ஒரே பரம்பொருளின் இரு வடிவங்களாக, இப்பிரபஞ்சத்தின் அம்மை அப்பனாய், இறைவன் இறைவியாக விளங்குமிவர்கள் ஆன்மாக்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்து, அவற்றின் மீதுள்ள இயல்பான அன்பினால், அவற்றைப் பீடித்துள்ள மலபந்தங்களை நீக்கிச் சத்திநிபாதம் செய்து (திருவருள் பாலித்து) ஈடேற்றுகின்றனர்.

பார்க்குமிடந்தோறும் நீக்கமற நிறைந்திருக்கும் பராபரமாம் இறைவனின் தலைசிறந்த சாந்நியத்தினை ஆலயங்களிலேயே கண்டு உய்தி பெறலாமென ஞானிகள் பலர் கூறியுள்ளனர். எனவே 'ஆலயமே இறைவன்' என்னும் கருத்திலே ''ஆலயம் தானும் அரனெனப்படுமே'' எனச் சைவசித்தாந்த முதனூலாகிய சிவஞானபோதம் கூறும். இவ் ஆலயம் புதிதாகக் கட்டி முடிந்த பின்போ அல்லது திருத்தியும் புதுக்கியும் அமைத்த பின்போ அல்லது வேறுசில காரணங்களுக்காகவோ அதிலே தெய்வ சாந்நித்தியத்தினை ஏற்படுத்துமுகமாகச் செய்யப்படும் பாரிய சமயக்கிரியையும் விழாவுமே மஹாகும்பாபிஷேகமாகும். வேதங்களிலும், சிறப்பாக அவற்றின் வழிநூல்களாகிய ஆகமங்களிலும், பத்ததிகளிலும் கூறப்பட்டுள்ள விதிகளின்படி சிவாச்சாரியர்கள் பலர் ஒன்று சேர்ந்து செயற்படும் இப்பெருவிழா ஆண்டுதோறும் நிகழ்வதன்று. பொதுவாகக் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் சிறப்புப்பொருந்தியதாகும் இறைவன், ஆன்மாக்கள், பிரபஞ்சம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாய், உலகனைத்தினதும் நன்மைக்காகவே இது நடத்தப்படுகின்றது. இதனை ஒரு

வரோ அல்லது பலரோ செய்வித்தாலும் இதனால் இதனைச் செய்விப்போர், செய்வோர் மட்டுமன்றி உலகனைத்துமே நன்மையடையும். எனவே, யாவரும் இதனைக் கண்டு களித்து இறைவன் அருள் பெற்றுய்வார்களாக

இப்பெயர்ப்பட்ட மஹாகும்பாபிஷேகம் ஒன்று இவ் ஆண்டு தைத்திங்கள் 28ம் நாள் புங்குடுதீவு மேற்கு இருபிட்டியிலுள்ள அரியநாயகன்புலம் விநாயகர் ஆலயத்திலே நடைபெற விநாயகப்பெருமானின் திருவருள் பாலித்துள்ளார் என்பதை அறிந்து மிக மகிழ்ச்சியடைகிறேன். அவ்வூர்வாசி என்ற வகையில் மேலும் மகிழ்ச்சியடைகின்றேன். சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சப்த தீவுகளிலே வேதமுதல்வனாய், ஞானநாயகனாய், ஞாலமுதல்வனாய் மிளிரும் விநாயகப்பெருமானுக்குப் பல ஆலயங்கள் உள்ளன தீவகத்தின் நடுவே திகழும் புங்குடுதீவிலே அப்பெருமானுக்கு ஏழு பெரிய ஆலயங்கள் உள்ளன. இவ் ஆலயங்களிற் பல சுமார் மூன்று நூற்றாண்டு பழைமை வாய்ந்தவை. இவற்றுட் பழைமை வாய்ந்த ஒன்றான மேற்குறிப்பிட்ட ஆலயப் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேக நிகழ்வினைச் சிறப்பிக்கும் வகையில் மலர் ஒன்றினை இவ் ஆலய அறங்காவலர் சபை வெளியிட முன்வந்துள்ளமை பாராட்டற்குரியது. இத்தகைய மலர் சமய அறிவுக்களஞ்சியமாக மட்டுமன்றி சமயவரலாற்று ஏடாகவும் இலங்குதல் சாலவும் நன்று. உலகத்தவர் அனைவரும் நன்மை பெறவும், குறிப்பாகப் பல ஆண்டுகளாக அல்லற்பட்டு வரும் ஈழத்தமிழ் மக்களின் இன்னல்கள் விரைவிலே தீர்ந்து சமாதானமும், பொருளாதார சுபீட்சமும், ஆன்மீகமும் மலர விநாயகப்பெருமான் திருவருள் பாலிப்பாராக! இம்மஹாகும்பாபிஷேகம் நன்கு நிறைவேற ஆனைமுகன் திருவருள் புரிவாராக என மனமார வாழ்த்துகின்றேன்.

வி. சிவசாமி

சமஸ்கிருதத்துறை.
யாழ். பல்கலைக்கழகம்

அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
கும்பாபிஷேகக்குழுத் தலைவர்

## திரு. கி. கதிரவேலு

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகப்பெருமானின் அருளை அனைவரும் அறிதல் பொருட்டும் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" எனும் திருநோக்கத்திற்குட்பட்டும் கும்பாபிஷேகச் சிறப்புமலர் இத்தருணத்தில் வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும்.

ஆலயத் திருப்பணி வேலைகள் சிறப்புற நடைபெற்று கும்பாபிஷேகம் நல்ல முறையில் நிறைவெய்த பலர் பாடுபட்டிருக்கிறார்கள். வாரி வழங்கியுள்ளார்கள். அத்தோடு இச்சிறப்புமலர் வெளியிடவும் பலர் உழைத்திருக்கின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் அருள்கிடைக்க வேண்டுகிறேன்.

உள்ளத் தெளிவுடனும் ஆழ்ந்த பொருட்சிறப்புடனும் கள்ளங்கபடமற்ற பெரியார்கள் தொகுத்திணைத்து வெளியிடும் இம்மலர் விநாயகப் பெருமானின் பாதத்தாமரையில் மலர்ந்து பிஞ்சு உள்ளங்களில் என்றென்றும் மணம்பரப்ப வாழ்த்துகின்றேன்.

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

சுபம்!

கி. கதிரவேலு

# கும்பாபிஷேக தத்துவார்த்தம்

ஸ்ரீ இரகுநாதக்குருக்கள்

*அரியநாயகன்புலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானக் குருக்கள்*

அனாதி மலமுத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த ஜோதியாயினும் அனாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கி, போக மோஷங்களையடைய ஆலயத்தில் நிறுவப்படும் விநாயகத் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும். கும்பாபிஷேகம் என்பது, குடமுழுக்கு பெருஞ்சாந்தியாகும்

சுத்த சிவஜோதி நிஷ்கள திருத்தவத்தில் நின்று உண்டான எல்லை கடந்த வடிவமான பரபிந்துவையுடைய நாதமயமான சிவம் தோன்றி அதில் நின்று எல்லை கடந்த பராசக்தி தோன்றும் அதில் நின்று எல்லைப்பட்ட அபரநாதம் தோன்றும். அதில் நின்று எல்லைப்பட்ட அபரபிந்து தோன்றும். அதில் நின்று ஆதிசக்தி தோன்றி உலகவியாபக பேதத்தால் இச்சாசக்தி ஞானசக்தி – கிரியாசக்தி தோன்றும். மேலே கூறிய அபரபிந்துவாகிய பராசக்தி முதல் பஞ்சசக்திகளில் நின்றும் முறையே சிவசாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியம் - மூர்த்தி சதாக்கியம் - கர்த்துரு சாதாக்கியம் - கன்மசாதாக்கியம் என்னும் பஞ்ச சாதாக்கியங்கள் தோன்றும். இவற்றுள் கன்மசாதாக்கியம் என்பது ஆலயத்தில் தாபிக்கப் பெற்ற லிங்க ஆவுடையாரின் உருவமாகும். இதுவே அருவுருவமாகிய சதாசிவரூபமாம். இச்சதாசிவத்தினின்று மனோன்மணியும், மனோன்மணியினின்று மகேஸ்வரனும், மகேஸ்வரனிலிருந்து மகேஸ்வரியும், மகேஸ்வரியிலிருந்து ஸ்ரீ கண்ட உருத்திரமும், ஸ்ரீகண்ட உருத்திரரிலிருந்து உமையும், உமையிலிருந்து விஷ்ணுவும், விஷ்ணுவிலிருந்து இலக்குமியும் இலக்குமியிலிருந்து பிரம்மாவும், பிரம்மாவிலிருந்து வாணியும் தோன்றி உலகத்தைக் காரியப்படுத்துகின்றார்கள்.

இங்ஙனம் செயல்படும் பொழுது உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப அறிவு இச்சைகளையும், தநு, கரண, புவன, போகங்களையும் கொடுப்பார். ஆன்மாக்களாகிய நாம் இத்தநுவாகிய சரீரத்தைக் கொண்டு சிவசாஸ்திர உணர்ச்சியால் நல்லறிவு தலைப்பட்டு பதி புண்ணியமாகிய கும்பாபிஷேகம் முதலிய சிவதர்மத்தில் பங்குபற்றி தரிசிக்க வேண்டியது முதற்கடமையாகும். அங்ஙனம் தரிசிக்கும் அன்பர்கள் ஒவ்வொரு கிரியைகளையும் ஊன்றிக் கவனித்து உணர்ந்து தரிசித்தல் அதிக பயனைத்தரும் எனக்கருதியே இக்கட்டுரையினை எழுதத் தலைப்படுகின்றேன்.

## 1 தனபூசை:-

திரவியத்தைப் பூசிப்பது புண்ணியவசத்தால் சம்பாதிக்கப்பெற்ற திரவியத்தை சிவார்ப்பணம் செய்து பின்னர் அதனை மூன்று பாகம் செய்து ஒருபாகம் ஆலய கட்டிட வேலைக்கும், மற்ற பாகத்தைக் கொண்டு நித்தியபூசை, மாதந்தோறும் வருகிற நக்ஷத்திர திதிகளில் செய்கின்ற நைமித்திகச் செலவு, சுவாமிக்கு வேண்டிய திரு ஆபரணம், கிராமம் முதலியன வாங்குவதற்கும் மூன்றாவது பாகத்தால் கும்பாபிஷேகச் செலவும் செய்ய வேண்டும்.

இனி கும்பாபிஷேக பாகத்தைப் பதினொருபாகம் செய்ய வேண்டியது.

| | | | |
|---|---|---|---|
| 1 | யாகம் கட்டுதல் முதலானவற்றிற்கு | — | இரண்டுபாகம் |
| 2 | அபிஷேக திரவியம் | — | ஒருபாகம் |
| 3 | ஆசார்யதக்ஷிணைக்கு | — | இரண்டுபாகம் |
| 4 | மூர்த்தபர் கட்கு | — | ஒருபாகம் |
| 5 | வேதம் தேவாரம்ஓத | — | ஒருபாகம் |
| 6 | தானுதிகட்டு | — | ஒருபாகம் |
| 7 | அன்னதானத்திற்கு | — | ஒருபாகம் |
| 8 | சிற்பிபரிசாரகத்திற்கு | — | ஒருபாகம் |
| 9 | யாக சாமான்களுக்கு | — | ஒருபாகம் |

பதினொரு உருத்திரர்கள் பூஜித்தல் தனபூஜையாம்.

## 2 அனுக்ஞை:-

உத்தரவு பெறுதல் தனது குரு: சர்வ சாதகர், போதகர் முதலானவர்களையும் சிவ னையும் வழிபட்டு நல்ல வழிவந்த இந்தக் திரவியம் குராபாபிஷேகச் செலவிற்கு யோக் யதை உண்டாகும் படியாகவும் சாஸ்திரப் படி செய்ய உத்தரவு தரவேண்டும் என உத்தரவு பெறுதலாம்.

சிவனிடம் உத்தரவு பெறுதலில் இரண்டுவகை உண்டு. ஒன்று சாங்கம் மற் றையது உபாங்கம் சிவனிடமும் சக்தியிட மும் கேட்டல் சாங்கமாகும். உபாங்கத்தில்

கணேசர் சிவனுரின் வலக்கண்
முருகன் சிவனுரின் இடக்கண்
நந்தி சிவனுரின் மூக்கு
சண்டிகேஸ்வரர் சிவனுரின் காது

ஆதலால் இவைகளை நாம் செய்யும் கிரி யைக்கு ஏற்றவாறு உணர்ந்து செய்யவேண் டும் இது உபாங்க அனுக்ஞையாகும்.

## 3 பிரவேசபலி:-

பிரவேசிக்கச் செல்லுமிடத்தில் உள்ள தேவதைகளை பூசித்து உணவு கொடுத்து எல்லோரையும் நோக்கி "கடல், வனம், மலை முதலிய இடங்களுக்குச் சென்று சுல பமாக இருங்கள். இவ்விடத்தில் இறைவனை இருத்தல் வேண்டும்" எனக்கூறி அவர்களை திருப்திப்படுத்தலாம்.

## 4 வாஸ்துசாந்தி:-

வாஸ்துப்பிரமனை வழிபடல். பூமிக்கு அதிபதியாகிய பிரமனைப் பூசித்து பூமியின் அசத்பாவமாகிய குற்றங்களை எரித்துப் பாவித்து அமிர்தத்தால் நனைத்து சுத்த மாக்கிக் கொள்வதே "வாஸ்துசாந்தி" யாம்.

## 5 மிருத்சங் கிரகணம்:-

மண் எடுத்தல் - முன் அமிர்தத்தால் நனைக்கப்பட்ட மண்ணை முளையிடுவதற்காக பூமிதேவியை வணங்கி அவள் வயிற்றி னின்று எடுத்தலாம்.

## 6 ஆசார்ய பூஜை:-

குருவை வழிபடுதல் - பிரதான குரு வுக்கு சகல உபகாரங்களும் கொடுத்து "குருவே! நீங்கள் பிரம்மாவாகவும், விஷ் ணுவாகவும், பரப்பிரம்மாகவும் இருக் கின்றபடியால் இச்சிவ கைங்கரியத்தைச் செய்து பக்தர்களைச் சிவானுக்கிரஹத்திற் குப் பாத்திரங்கள் ஆக்க வேண்டும் என வழிபடுதலாம்.

## 7 அங்குரார்ப்பணம்:-

முளை இடல்: நெல் முதலிய நவதானி யங்களைப் பாலில் ஊறவிட்டு சந்திரனை உலக க்ஷேமத்தின் பொருட்டுப் பயிர் வளர்த்தலாகும்.

## 8 ரக்ஷாபந்தனம்:-

திருக்காப்பு அணிதல் - உலக சம்பந்தத்தி னல் ஏற்படுகின்ற குற்றங்களை நீக்கிக்கொள் ளவும், எடுத்த காரியத்தை இடையூறின்றி முடிப்பேன் என்ற உறுதியுடன் வாகீஸ்வரி யின் கர்ப்ப நாடியில் உண்டானதாகப் பாவித்து நாகராஜனைப் பூஜித்துச் செய்வ தாகும்.

9 பூதசுத்தி:-

பூதங்களைச் சுத்தி செய்தல். பிருதுவி முதல் ஐந்து பூதங்களையும் இவை சம்பந்த மான ஆத்மாவையும் சுத்தப்படுத்துவதா கும்

ஆன்மாவானது தனது அறிவு மயங்கி மாயையின் வயத்ததாய், மாயை செய் விக்கின்ற வேலைகளை நானே செய்விக்கின் றேன். எனது சொத்து, என்று அகங்கார, மமகார மேலீட்டால் செய்கின்ற, நினைக் கின்ற குற்றங்களை நீக்கி ஆத்மாவைச் சுத் தப்படுத்துவதாம் இங்ஙனம் சுத்தப்படுத் திய பின் இறைவனைப் பூசைசெய்ய வேண் டியது.

இந்தப் பூதசுத்தியானது ஆத்மாக்கள் அடைகின்ற பதப்பிராப்தியினாலும், தீக்ஷா பேதங்களாலும் ஐந்து வகைப்படும். இதில் குரு மூர்த்தியானவர். சிவப்பிரத்தியங்கரா கையாலும், சிவாஸ்ரமிகளாகவும், ஆதி சைவர்களாகவும் இருப்பதால் சிருட்டிக்கிர மம்- திதிக்கிரமம்- சம்ஹாரக்கிரமம்- திரோ பவக்கிரமம்- அனுக்கிரகக்கிரமம் என்ப வற்றுள் ஐந்தாவதாகிய அனுக்கிரகக்கிரமம் பூதசுத்தியே செய்தல் எனப்படும்.

"பஞ்சவித சுத்தியினைப் பண்ணி இக
பாங்காகப் பஞ்சவித பாசமறுப்பார்"

(சைவசமயநெறி 502)

தனது தேகமானது பிருதுவி முதலிய பஞ்சபூதங்கள் விதையாகவும், பிரம்ம விஷ்ணுக்களால் முளையுண்டானதாகவும் ராகம், துவேஷம், தர்மம், அதர்மம், மோகங்கள் வேராகவும் வித்தை அவித்தை அதிபதிகளாய் ரக்ஷிக்கிறதாகவும், கலை முத லிய தத்துவங்கள் சாரமாகவும், தன்மாத் திரைகளான இந்திரியங்கள் கிளைகளாக வும். விஷயம் தளிராகவும், பிரபஞ்சம் புஷ்பமாகவும், புத்தி வியவசாயிகள் சங் கல்ப்ப பழமாகவும், பழரசத்தைப் புருஷனு கிற பக்ஷி புசிக்கிறதாகவும், பாவித்து வேர் மேலாகவும் தளிர் கீழாகவும் ஆலமரத் தைப்போல் தியானித்து தலைமுதல் பாதம் வரை, ஆகாசம், வாயு, அக்னி, ஜலம் பிரு துவி இவைகள் ஒன்றிலொன்று சேர்ந்து தோன்றும் விதையாகவும் பாவித்து ஜாதி, குலம், குணம் முதலியவற்றிற்குக் காரண மான தூல தேகத்தைத் தியானித்து யோனி க்ஷேத்திரத்தில், பிரம்மன் சிருஷ்டிப்பவரா கவும் விஷ்ணு காக்கின்றவராகவும் தியா னித்து நமது கர்மம் மூலமாகிய கிழங்கா கவும், ஆணவம் முளையாகவும் தர்மாதர் மத்தைப் பாவித்து அத்துடன் ராகத்வேஷ மோகம் உபமூலமாகவும் அவித்தை மாயா கர்மத்தில் இருந்ததாகப் பாவித்து வித்தை பரமெனவும் இந்தப் பரம்பரி பாலிப்பதா கவும், பாவித்து நடந்தது, நடக்கின்றது, நடக்கப்போகின்றது ஆகிய காலத்துவ விரு க்ஷம் அசையாதிருக்கும் பொருட்டு சராச ரமாகப் பாவித்தல் வேண்டும். இனி தன் மாத்திரேந்திரியம் - ஞானேந்திரியம் என் றும் கன்மேந்திரியமென்றும் இரண்டாகப் பிரியும். அதைக் கொப்புள் கிளைகளாகவும் தியானித்து சப்தம் முதலிய ஐந்தையும் ஐந்து துளிராகவும், புத்தி சங்கல்ப்ப பழத் தைப் பக்ஷிரூபமான ஆத்மா புசிக்கிறதாக தியானிக்கவேண்டும்.

ஹோம் என்னும் மந்திரத்தை ஐந்து முறை உச்சரித்து ஆலமரத்தை அசைவற் றதாகப் பாவித்து பின்னர் ஹீம் என்னும் மந்திரத்தை மூன்றுமுறை உச்சரித்து வலது கால் கட்டைவிரல் முதல் உண்டாகும் காலாக்கினியினால் உலர்ந்த பத்திரத்தைத் தகிக்கப்பட்டதாய் தியானித்து (ஹைம்) என்னும் மந்திரத்தை இரண்டுமுறை உச் சரித்து தகித்த சாம்பலைப் பரந்ததாகத் தியானித்துப் பின்னர் (ஹளம்) என்னும் மந்திரத்தை ஒருமுறை உச்சரித்துப் பரந்த சாம்பல்களை சேர்த்து அந்தச் சாம்பலை சுத்தஸ்படிகமாகவும், நிர்மலமாகவும் தியா னித்து முன்கூறிய ஆகாயத்துள் அடங்கி யிருக்கும் சிவாபின்னமான ஆத்மாவை சிவ னிடத்தில் சேர்த்து எல்லா உபாதைகளில் நின்றும் ஓம் ஹாம் சிவாய வௌஷட்— என சிகையில் நின்றும் அதே முகமாக இருக்கும் பத்மத்தில் அமிர்தம் பெருகி வருவதாய் தியானித்து உள்ளும் புறமும்

நினைத்துப் பின் இருதய ஓம் அகார உகார மகாரமும் அதிக ஒளியும் சர்வ வல்லமை முதலான ஆறு குணங்களோடும், எல்லா வித்தைகளையும் உண்டாக்கின்றதாகப் பாவித்து இருதய கமல கர்ணிகையின் நடுவில் இந்த ஆத்மா புரியட்ட தேகமுடையதாம் தியானித்து இந்த ஆத்மாவுக்கு உள்ளிருக்கும் பரமாத்ம ஸ்வரூபமானது எல்லா ஐஸ்வரியங்களையும் கொடுப்பதாயும் சாந்தரூபமாயும், ஆறுகுணங்களால் நிறைந்துள்ளதாயும் உள்ள ஆத்மாவை சிவஸ்வரூபம் செய்து கலைகளைத் தாண்டி, பஞ்சப் பிரமத்தை ஆவாகித்து பிராசாத மந்திரத்தை தேஹத்தில் ஆவாஹித்து அஸ்திர மந்திரத்தால் திக்கு பந்தனமும் கவச மந்திரத்தால் மும்முறை சுற்றி கலாமயத்தைத் தாண்டி சிவஸ்வரூபத்தை உண்டாக்க வேண்டும் பின் தனது இடைநாடியால் பூரகமும், சுழுமுனை நாடியால் கும்பகமும் செய்து ஜீவாத்மாவைக் கொணர்ந்து உண்டான அமிர்தத்தால் தனது தேகத்தை நனைத்து சிவனோடு ஐக்கியம் செய்க இதன் விளக்கங்கள் சிலவற்றைக் குருமுகமாய்க் கேட்டுணர வேண்டியது. இது அனுக்கிரக பூதசுத்தியாம்.

அந்தர்யாகம்- உட்பூசை சிவபெருமானை வழிபட அந்தர்யாகம் மிக அவசியம்.

''அர்ச்சித்தானந்தர் யாகம் புரியாதே
பலத்தை வர்ச்சித்தானென்றே மதி''
(சைவசமயநெறி 603)

நமது இருதய கமலமானது வாழைப்பூ போன்றது. அப்பூவின் அடியிலிருக்கின்ற சுத்தமாயை அர்க்கிய பாத்திரமாகவும் பிந்துவிலிருந்து பெறுகின்ற அமிர்தத்தை இதில் நிறைத்து பூசித்து அந்த ஜலத்தை சிரசில் அக்கினி மண்டலங்களைப் பாவித்து முறையே சதாசிவம், மகேசம், சிவம் இவர்கள் இருப்பதாகவும், இந்த வாழைப் பூவின் மத்தியிலுள்ள தாமரைப்பூ எட்டு இதழோடுகூடியதாய் தொப்புளுக்கு மேல் எட்டு அங்குலம் தாண்டி அந்தக்கமலம் வைக்கப் பட்டுள்ளதை இந்தத் தாமரைப்பூவில் அடித்தண்டு ஒன்பது துவாரமுடையதாய் நான்கு பாகங்களிலும் கர்ணிகையோடு கூடியதாய் கர்ணிகைக் கேசங்கள் கடைவிரல் இறையின் நீளமுயரமுற்றதாய் இந்தக் கர்ணிகையில் சூரிய மண்டலமும் இதன் நடுவில் சந்திர மண்டலமும் இதன் நடுவில் அக்கினி மண்டலமும் இருப்பதாய் தியானித்து சூரியமண்டலத்தில் அனுகத சிவத்தையும், சந்திர மண்டலத்தில் அமளங்கசிவத்தையும், அக்கினி மண்டலத்தில் சிவபெருமானையும் பாவித்து குண்டலினி சக்தியை ஆசனமாக வைத்து இருதய கமலத்தில் சக்தியாதி சக்திபரியந்தம் பூஜித்து அதற்குமேல் ஈசானுதி பஞ்சப் பிரமத்தாலும், ஞானமய தேகம் கற்பித்து நேந்திரம் கொடுத்து மூலத்தால் வியாபகம் செய்து இருதயாதி ஆறு அங்கங்களையும் பூஜித்து அஹிம் அர்க்கிய ஜலம் க்ஷேபித சக்தியில் நின்று பெறுகிற பால் அபிஷேகம் புத்தி குங்கும கர்ப்பூர, கஸ்தூரி, கோரோசனை, சந்தனுதிகளால் பூசுதல்.

மனமயமான ஆதார பாத்திரத்தில் பிசாணுபானவாயு அக்கினி அகங்கார கர்வம் இவைகள் தூப தீபமாகவும் பிருதுவியிலிருந்து உண்டான தன்மாத்திரைகள் உபசாரங்களாகவும், ஜலம் உட்கொள்ளவும் அக்கினி கண்ணுடியாகவும் வாயு விசிறியாகவும், ஆகாசம் தோத்திரமாகவும், பிருதுவி நைவேத்தியமாகவும் பாவித்து பூசிக்கவும். யோகப்பயிற்சி தெரியாதவர்கள் இருதய கமலத்தில் வித்தியா பீடத்தில் சிவாசன மூர்த்தி மூலத்தால் பூசித்துத் தியானிக்கலாம் பின்னர் நாபி குண்டத்தில் உள்ள சித் அக்கினியில் ஹோமம் செய்யவும்.

எங்ஙனமெனில் சுத்தமாயை குண்டம், இச்சை, ஞானம், கிரியை மூன்றும் மேகலையாம்! மூலாதாரம் நெய்பாத்திரம், அமிர்ததாரையே நெய். குண்டத்தில் சிதக்கினியை உண்டாக்கி துவாத சாந்தத்தில் கொண்டு போய்ச் சேர்த்து அந்த அக்கினியைச் சுழுமுனுநாடி வழியாக நாபி குண்டத்தில் வைத்து மூலமந்திரத்தாலும் பிராசாத மந்திரத்தாலும், நூற்றெட்டுக் ஹோமம் செய்து சுஷும்னுநாடி, இடைநாடியாகிய சிருக்கு சிறுவங்களால் தேய்யைப் பூரித்து வௌஷட் என்னும் பதத்தை

அந்தமாகவுடைய பிரசாதக மந்திரத்தால் பூர்ணாகுதி செய்ய வேண்டும். இதுவே ஹோமமாகும்.

இனி சமாதியாவது, ரேசக பாதியால் கும்பகம் செய்து அனாகத சிவத்தை அமனஸ்க்க சிவத்தில் சேர்த்து, அமனஸ்க்க சிவத்தை பரமசிவத்தில் சேர்த்துத் தியானிக்கவும் இதனால் சித்தம் அழிநது ஆனந்தம் உண்டாகி சிதானந்தன் ஆகின்றான். இச்சமாதி அணிமா முதலிய எண்வகைச் சித்திகளுக்கும் இருப்பிடமாம். சிதஸ்வரூபமான சிவபிரானிடத்தில் லயித்திருப்பது தான் அந்தர்ய ஜனமாம். பின்னர் பிநதுவை எங்குமுள்ளதாகத் தியானித்து நக்ஷத்ரா காரமாயுள்ள விநாயகரை தியானித்து சந்தனத்தால் நெற்றியில் பொட்டிட்டு மூலமந்திரம் உச்சரித்து சிகையில் புஷ்பம் ஒன்று தரித்துக் கொள்வது ஆத்ம பூஜையாம்.

பின்னர் சிரசு முதல் பாதம்வரை சத்தமயமான தேகத்தை உண்டாக்கி ஈசானம் முதலிய மந்திரங்களாலும் முப்பத்தெட்டு என்னும் கணக்கினையுடைய கலாநியாசம் செய்ய வேண்டும் இனி மூலாதாரம் முதலிய ஆறு இடங்களிலும் கிரந்தாக்ஷிரக் கணக்கின்படி வகரம் முதல் ஸகரம் ஈறாக நான்கு எழுத்தும், பகரம் முதல் லகரமிறுதியாக ஆறு எழுத்தும், டகரம் முதல் பகரமீறாகவும், ககரம் முதல் டகரம் இறுதியாகவும், அகரம் முதல் பதினாறு உயிர் எழுத்துக்களும், ளவும் க்ஷவும் ஆக முறையே 4, 6, 10, 12, 16 2 என்னும் கணக்குப்படி முறையே மூலாதாரம் முதல் ஆக்ஞை ஈறாக ஆறு இடங்களிலும் பிரம்மா முதலிய ஐந்து மூர்த்திகளையும் ஐந்து இடங்களிலும் இதற்குமேல் சிரசிற்குமேல் ஓர் அங்குலம் அல்லது சிரசிற்குமேல் பன்னிரண்டு அங்குலம் ஆகிய இடங்களில் ஓர் இடத்தில் ஆயிரம் இதழ்களோடு கூடிய கமலத்தின்மேல் சித்ஸ்வரூபியாகவும், சூக்ஷமரூபம் உடையவராகவும் நிஷ்களராகவும் ஷாட்குண்யராகவும், ஞானமய தேகமுள்ளவராகவும் விநாயகரைத் தியானிக்கவும்.

பின் அகரம் முதல் க்ஷகரம் ஈறாக ஐம்பத்தொரு அக்ஷரங்களையும் சிரசு முதல் பாதம் வரை நியாசம் செய்து பின்னர் கிரியை செய்யும் பொருட்டுத் தனது கைகளை சிவரூபமாக்க வேண்டியது பின்னர் தான் இருக்குமிடத்தை அஸ்திர மந்திரத்தால் இம்முறை தட்டி பத்துத்திக்குகளிலும் சிவமந்திரத்தால் மும்முறை தட்டி பத்துத்திக்குகளிலும் சிவ மந்திரத்தால் சோடிகா முத்திரை செய்து கவசத்தால் மும்முறை சுற்றி அக்கினிமயமான மூன்று மதில்கள் உண்டாக்கி சக்தி மந்திரத்தால் தேனுமுத்திரையும் காட்டி ரக்ஷிக்கப்படுவதாகியதான சுத்தியையும் செய்து பின் அர்க்கிய ஜலததால் தன் சிரசிலும் பூஜாத் திரவியங்களிலும் அஸ்திர மந்திரம் சொல்லித் தெளித்து திரவிய சுத்தி செய்யவேண்டியது.

பின் பிராணாயாமத்தால் மூலமந்திரமுச்சரித்து துவாத சாந்தத்தில் பரமசிவத்தையும், லலாடத்தில் அமனஸ்க சிவத்தையும், கண்டத்தில் அனாகத சிவத்தையும் தியானித்து ஆசனத்தில் சிவாசனமும, இருதயத்தில் சிவமூர்த்தியும் சிரசில் சிவத்தையும் பூஜித்து பிரமாங்கத்தை அடிமந்திரித்து மூலமந்திரம் உச்சரித்து சிரசில் புஷ்பம் வைத்து. சிவாகாரமாக பாவித்து பிரசாத மந்திரத்தை ஹ்ருஸ்வ தீர்க்க புலுத-சூக்கும அதி சூக்கும கிரமப்படி மூலாதாரம் முதல் துவாத சாந்தம் வரை ஓம் காரம முதல் நமோந்தம் இறுதியாக முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன். மகேஸ்வரன், சதாசிவம். அனாஹத அமனஸ்க்க உன்மன் பரமசிவானந்தம் தியாகக்கிரமமாய் உச்சரித்து மந்திரசுத்தி செய்து கொள்ள வேண்டியது. இதுவே பூதசுத்தி எனப்படும்.

பின்னரை யாகத்தில் கும்பம் வைத்து பூஜித்து மூர்த்திகட்கு தான்யாதிவாசம் ஜலாதிவாசம் முதலியன செய்து மருந்து சாத்தி எண்ணெய்க் காப்புச்சாத்தி, பிம்ப சுத்தி முடித்துப் பின்னர் குறித்த முகூர்த்தத்தில் ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்துப் பூசித்து நல்ல முகூர்த்தத்தில் பக்தர்கள் தோத்தரிக்க வேத. தேவார பாராயணங்களோடு சகல வாத்திய இசைகளுடன் குரு மூலமந்திரம் உச்சரித்துக் கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டியது. வார்த்தனி கும்பத்தைப் பீடத்திலும், அஷ்டவித்தியேஸ்வர கும்பத்தை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து விஷேட பூஜை செய்யவேண்டியது.

பின்னர் நாற்பத்திஐந்தாம் நாள்வரை விஷேட அபிஷேக பூஜை செய்து ஈற்றில் சங்காபிஷேகம் செய்து நித்திய நைமித்திய காமிய பூஜைகளை முறைப்படி செய்வித்து திருவருளுக்குப் பாத்திரர்களாகிய மனோபீஷ்டங்களைப் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு பெறுவார்களாக!

சுபம்

# தோத்திரம் செய்யவருள்வாய்!

— கவிஞர் க நாகலிங்கம் —

### காப்பு

ஆனை முகத்தனை அடியார கத்தனை
பானை வயிற்றனை பால் வெண்ணெயிற்றனை
தேனை நிகர்முது செந்தமிழிற் சொல
மானை நிகர்கலை வாணியைப் போற்றுவாம்.

1. தேசுற்ற நவமணிகள் வீசுற்ற ஒளிமிளிர
    திரு முடியில் மணிமகுடமும்
திருவுற்ற மரகதச் சுட்டியுறு நெற்றியிற்
    திலத சிந்தூர நிலவும்
மாசற்ற கம்பமத கும்பமுயர் தும்பிமுக
    கெம்பீர வடிவினழகும்
மலைவுற்ற பாசமுடன் அங்குசம் கொம்பினொடு
    இலட்டுகம் வைத்த கரமும்
தூசுற்ற திருவரையும் துகளற்ற குடவயிறும்
    துய்யவிரு திருவடி களும்
தொழுதுற்ற வென்மனதில் பழுதற்ற வன்பொழுக
    தோத்திரம் செய்ய வருள்வாய்
பாசுற்ற நெற்கழனி பரவுற்ற இருபிட்டி
    அரிய நாயகன் புலத்து
பதிவுற்ற சிறீவீர கத்தியென வந்தகண
    பதியுற்ற பிள்ளை யாரே

2. செஞ்சடையில் விஞ்சுகுளிர் கங்கைநனி பொங்குமெழில்
    சங்கர ணினங்க மதனில்
தங்கவொரு பங்குபெறு மங்கைதவ கொஞ்சிமகிழ்
    கும்பமுக ஞான சுதனே
மிஞ்சுகவின் மஞ்ஞைகுற வஞ்சிமிக அஞ்சமா
    தங்கமென வந்த பொருளே
மஞ்சுலவு கஞ்சமலர் மஞ்சரி இலங்கு பணை
    புங்கமணி மார்பழகனே
வஞ்சமது தஞ்சமடை நெஞ்சமுடை வஞ்சர்நெறி
    கொஞ்ச மெனு மணுகாமலே
மஞ்சுமர விந்தமலர் பாதமிணை தந்துவெனை
    துங்கமுறவே யாளு வாய்
அஞ்சீத மங்குல் பொழிலான்றவேர் இருபிட்டி
    அரிய நாயகன் புலத்து
அங்குற்ற சிறீவீர கத்தியென வந்தகண
    பதியுற்ற பிள்ளை யாரே


3. அப்பமொடு அவல் மதுரமுப்பழம் எட்பொரி
அதிரசம் கடலை பயறு
அமுதுகறி மோதகம் சர்க்கரை கரும்பிளநீர்
ஆபூகவர்க்க மொடு தேன்
கப்பி வரு தொப்பைவயிறப்பனே வல்லபையின்
காதல் பெறு மணவாளனே
கற்பூர விரைபுனுகு சவ்வாது சுந்தமுறு
காமர் மிகு மணிவண்ணனே
தப்பாது வந்துவினை எப்போதுமல்லல் பல
தந்தவினை உந்து பவமே
தட்டாதறுத்து நிலை மிக்கேற வைத்துனது
தாள்பணிய நீயருளு வாய்
செப்பரிய திருவுற்ற செழுமையுறு மிருபிட்டி
அரிய நாயகன் புலத்து
சேர்வுற்ற சிறீ வீரகத்தியென வந்தகண
பதியுற்ற பிள்ளை யாரே

4. சூர் கொண்ட சூரனும் சோரவிருகூறுண்டு
சோகமுற வேல் கொண்டநன்
சோதி வடிவானவுரு சாமிகுரு முன்னவா
சுந்த ரானந்த குணனே
பேர் கொண்ட விகடதட வித்தகப்புதுமைநட
மாடு மெழி லேரம்பனே
பீடுமுற வளருமிரு வானினுறை கூனிளி
பிறையுமெனவோர் கொம்பனே
வார்கொண்ட சீர்குஞ்சி முடிசங்க கும்பமுனி
வண்கரக நீர்கொட்ட வோர்
வாய்த்த கருபிள்ளையென வந்தசுசி ஞானபதி
வண்மைவள போத நிதிதேன்
ஆர் கொண்ட வணிசோலை இருபிட்டியெனுமூரில்
அரிய நாயகன் புலத்து
அழகுற்ற சிறீ வீரகத்தியென வந்தகண
பதியுற்ற பிள்ளை யாரே.

5. தந்தைதரு மாங்கனியை கந்தன் வருமுன்னமதை
தந்து விடுவென்ன முந்தும்
சந்தமுள தொந்தி வயிறந்த முதலற்றவொரு
தந்த முமமைந்த களிறே
விந்தைபெறு பாரதமு முந்தையுறு மேருமலை
மீதிலுயர் கோடு கொண்டு
விரித்தெழுது வித்தகா அற்புதா தற்பரா
விமலனே அமல மூர்த்தி
இந்துநதி சிந்துநடை நந்திதரு மைந்தவர
விந்தகர மைந்து முடையாய்
எந்தனது வந்தவினை சிந்தவுனை வந்தனை
புரிந்தவெனை வாழ வருள்வாய்
பந்தமுள காதலிமா பரவுற்ற இருபிட்டி
அரிய நாயகன் புலத்து
பதிவுற்ற சிறீ வீரகத்தியென வந்தகண
பதியுற்ற பிள்ளையாரே.

மருளுறு மணமும் கொடியவெங் குணமும்
மதித்தறி யாததுன் மதியும்
இருளுறு நிலையும் நீங்கிநின் அடியை
எந்தநாள் அடைகுவன் எளியேன்
அருளுறும் ஒளியாய் அவ்வொளிக் குள்ளே
அமர்ந்தசிற் பரவொளி நிறைவே
வெருளுறு சமயத் தறியொரணுச் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.





விநாயகப்பெருமான்

வானுலகு மண்ணுலகும் வாழமறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப்பரவி யஞ்சலி செய்கிற்பாம்.

*டொட் ரொபிகள்*
DOT TOFFEE (by TRANS LANKA)

*நிப்ஸ் பிஸ்கற் வகைகள்*
NIPS BISCUITS

LEVER BROTHER (Cey) Ltd.
*சோப்வகைகள்*

**வட மாகாண ஏகவிநியோகஸ்தர்கள்**

# NEW HOME NEEDS
## நியூ ஹோம் நீட்ஸ்

**No, 424, K. K. S. ROAD,**
**JAFFNA.**
Telephone: 24422

அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
மகாகும்பாபிஷேகம் சிறப்புற்று
மக்கள் வளமோடு வாழ
வாழ்த்துகின்றோம்.

**அறுசுவை உண்டிகள், அன்பான உபசரிப்பு,
அனைவரையும் அழைக்கிறோம்.**

விழாக்கள், வைபவங்களுக்கு தேவையான பல்சுவை
உண்டி வகைகள், விசேட கவனத்துடன் தரமாக
தயாரித்து வழங்குபவர்கள்

# லட்சுமி விலாஸ்

(சைவ உணவகம்)

**205, கே. கே. எஸ். வீதி,**

**யாழ்ப்பாணம்.**

---

# லலிதா ஜூவெல்லர்ஸ்

உரிமையாளர்:

**செல்லையா இந்திரசித்து**

## தங்கம் பவுண் நகை வியாபாரம்

"லலிதா மாளிகை"

213, 133, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

போன்:- 23205

எங்களிடம்

*கச்சான் அலுவா, எள்ளு அலுவா,*
*எள்ளு உருண்டை, கடலைப் பருப்பு, கச்சான் பருப்பு பால் ரொபி*
*இவைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும்*
*எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.*

உ

# பவானி விலாஸ்

**32 1, கல்லூரி வீதி,**
**நிராவியடி யாழ்ப்பாணம்.**

---

# CHANDIRA PRODUCTS

## சந்திரா தயாரிப்புக்கள்

எம்மிடம்

| | |
|---|---|
| குளுக்கோரச | எள்ளு அலுவா |
| மிடாய், சுவிங்கம் | எள்ளு உருண்டை |
| கச்சான் அலுவா | கடலைப் பருப்பு |
| கச்சான் பருப்பு | புல்டோ |
| மஸ்கட் | நைஸ் |

எந்தநேரத்திலும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

## சந்திரா தயாரிப்புகள்

*395 - 665, கே. கே. எஸ். வீதி;*
*யாழ்ப்பாணம்.*

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் — அளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்ருள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

உங்களுக்கு தேவையான மின்சார உபகரணங்களை
மலிவான விலையில் உயர்ந்த தரத்தில் பெற்றுக்கொள்ளவும்
அவற்றை சிறந்த முறையில் ஒப்பந்த அடிப்படையில்
சிறந்த வேலைப்பாடுகளுடன் பொருத்தி கொடுக்கும்
ஒரே ஒரு நிறுவனம்



## கரசன் எலக்றிக்கல்ஸ்
## KARASON ELECTRICALS

மின்னிணைப்பு ஒப்பந்தகாரரும் விநியோகஸ்தரும்

| | |
|---|---|
| 4, ஸ்ரான்லி வீதி, | 4, Stanley Road, |
| ஜே. எம். சி. பில்டிங், | J. M. C. Building, |
| (லிடோ சினிமா முன்பாக) | (Lido Cinema Opposite) |
| யாழ்ப்பாணம். | JAFFNA. |

குளிர்பானங்கள், பழவகைகள் மற்றும் சுனகலிங்கம் சுருட்டு

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## யாழ் கூல்பார்

இல. 7, பஸ் நிலேயம் முன்பாக,

யாழ்ப்பாணம்.

---

அன்பளிப்பு: சி. கிருபானந்தன்

அரவிந்தன்

**சொப்பிங் கொம்பிளக்ஸ்**

51, 4-ம் குறுக்குத் தெரு,

சின்னக்கடை,

யாழ்ப்பாணம்.

**நியூ கிறீன் பீக்கிங் பலஸ்**

சையினீஸ் ரெஸ்ரூரன்ஸ்

69, 4-ம் குறுக்குத் தெரு,

சின்னக்கடை.

யாழ்ப்பாணம்.

---

தங்க வைர வியாபாரிகள்

# மைதிலி ஜுவல்லர்ஸ்

உரிமையாளர் ஐ. நடராசா

"லலிதா பில்டிங்"

213/1A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம்

ஸ்ரீ வீரகத்தி விநாயகர்

திருத்தாளினை போற்றுகின்றோம்.

## சபாரெத்தினம் ஸ்ரோர்ஸ்

தம்பர்கடைச் சந்தி,

புங்குடுதீவு.

எடுக்கு மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேம்மை நமக்குள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்

**கொழும்பு நகரில் தங்குமிட வசதிகளுடன் உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசிவசதிகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்.**

# சுகம் இன்

# SUGAM INN

## 135, மலிபன் வீதி, கொழும்பு-11.

தொலைபேசி: 23449

திருவாக்கும்: செய்கருமம் கைகூட்டும்: செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்: — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலார் கூப்புவர் தம்கை.



## நியூ கல்யாணி ஜுவல்லர்ஸ்

**எங்கும் இல்லாததோர் புதிய டிசைன்களில்
அங்கம் எல்லாம் தங்கமென அழகூட்டிட
அற்புதக் கலையுள்ள நகைகளைத் தினம்
அள்ளி வழங்குவோர்**

# நியூ கல்யாணி ஜுவல்லர்ஸ்

**87, கன்னாதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம்.**



ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிராயிருப்பானை மகரகவேந்தன்
ருங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச் சயிலமானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்றந் தளிந்தானைப் பசும்பொற் றேட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து கரத்தானைப் போற்றல் செய்வோம்.


**மாநகரில் மலிவு விலையில்**

உங்களுக்கு தேவையான சகல விதமான கயிறு வகைகளுக்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்

# சித்தி விநாயகர் ஸ்ரோர்ஸ்

**234 (76), ஆஸ்பத்திரி வீதி,**

**யாழ்ப்பாணம்.**

பாலுந்தெளி தேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

தலை நகரில் சுகாதாரமான சுவையான
அசைவ உணவு வகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

V

கிருபா ஹோட்டல்

No. 19, 21, முதலாம் ரோகினி லேன்,
கொழும்பு-11.

பஞ்சமுக விநாயகரின் அருள் பாரெல்லாம்
பரவ வேண்டுகிறோம்

★

K. R. சிவலோகநாதன் அன்கோ
No. 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விக்னங்கள் தீர்க்கும்
விநாயகன் தாழ் போற்றி

விஜயா ஸ்டோர்ஸ்
64, ஆஸ்பத்திரி ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்:- 24184

# வைதிகமரபும் ஆகமமரபும்

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்

வேத காலத்தில் அக்கினி வழிபாடு அதிமுக்கியத்துவம் பெற்றது. அக்கினிக்குக் கொடுத்த ஆகுதிகளை விட மற்றத் தெய்வங்கள் யாவற்றுக்கும் அக்கினி மூலமே ஆகுதிகளை வேதகால மக்கள் வழங்கினர் அக்கினி கண்கண்ட தெய்வம்: அவனது அளப்பரிய பெருமை பற்றியும் ஒவ்வொருவர் வீட்டில் வளர்த்துப் போற்றப்படுவது பற்றியும் வேதப்பாடல்கள் அங்கங்கே கூறும் அக்கினியில் சமர்ப்பிக்கப்படும் ஆகுதிகள் கொடுத்தபின் சிறிது நேரத்திலேயே சாம்பராகி மறைந்து விடுகின்றன. அக்கினிக்கு எல்லாப் பக்கங்களிலும் முகம். அதனால் எங்கு நடப்பதையும் அறியும் ஆற்றல் உண்டு. தேவர்கள் யாவருக்கும் அக்கினி மூலமே ஆகுதி கொடுக்கும் வழக்கம் நெடுங்காலம் நிலவிவந்தது. இது வேதகாலச்சமய வழக்கு.

ஆகமங்கள் திருக்கோயில் வழிபாட்டை வகுத்துத் தந்த பெருநூல்கள். இங்கு வேதகாலத்திற் போன்று அக்கினிக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அக்கினியினூடாக ஏனைய தெய்வங்களுக்கு ஆகுதிகள் அளிக்கப்படவில்லை. இங்கு திருவுருவ வழிபாடே முக்கியமாக விளங்கிற்று. ஆகமங்கள் வேதங்களில் மறைந்து கிடக்கும் தெய்வங்களை எவ்வளவிற்கு அண்மையில் கொண்டு வரமுடியுமோ அவ்வளவு அண்மையிற் கொணர்ந்து, கண்ணுக்குத் தெரியாத தெய்வங்களை உருவங்களாக ஓரளவிற்குத் தெரிய வைத்தன. கோயில்களில் வழிபாட்டிற்காக நிறுவப்பட்ட தெய்வங்களின் வடிவங்கள் கண்ணுக்குத் தெரிவன. இத்திருவுருவங்கள் தனித்தனி நிறுவப்படுவதனால் அவ்வவற்றோடு தொடர்புறவும் வழிபடவும் ஆகுதிகளைத் தனித்தனியே நேரே கொடுக்கவும் எங்களுடைய தேவைகளை நேரடியாகச் சொல்லிப் பெறவும் வாய்ப்பு உண்டாயிற்று வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்களும் வேறு அமைப்புப் பெற்றன. பரோக்ஷப்ரீயா இவஹிதேவா: என்ற வேத வாக்கியத்துக்கேற்ப கண்ணுக்கே. எனவே, அறிவுக் கண்ணுக்கு புலனாகாத தெய்வங்களான சிவன், உமை, கணபதி, சுப்பிரமணியர் முதலிய தெய்வங்கள் கண்ணுக்குத் தெரியவல்ல உருவம் பெறும் தெய்வங்களாயின. இவ்வுருவங்களைக் கோவில்களில் நிறுவி, ஆகமங்கள் காட்டும் வழிபாட்டு முறைக்கமைய மக்கள் வழிபாடு நிகழ்த்தி வருகின்றனர். இந்திரன், அக்கினி, யமன், வருணன், வாயு, சோமன் முதலிய தெய்வங்களின் நிலை கோயில் வழிபாட்டில் வேறுபடக் காண்கின்றோம். இவை ஆவரண தெய்வங்களாயமைவதுடன் இவர்களும் இவர்களுடைய சக்தியாகிய ஆயுதங்களும் திக்குப்பாலர்களாயமையக் காண்கின்றோம். ஒரே பொதுவான அக்கினியிடமே தேவர்கள் அனைவருக்கும் ஆகுதி கொடுக்கும் வழமையைத் திருக்கோயில் மரபு மாற்றியமைத்து விட்டது. இம்மரபு வடநாட்டுத் தேவாலயங்களிலும் பார்க்கத் தென்நாட்டுத் தேவாலயங்களிலே ஓங்கி வளரலாயிற்று.

இங்கு, வேதகாலத்தில் ஆகுதிகளாகக் கொடுத்த (ஹவிஸ்) அவி, தெய்வங்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் நிவேதனம் ஆயிற்று அவ்வத்தெய்வத்துக்கு உகந்ததாக நூல்கள் கூறும் பொருள்களே, நிவேதனமாகப் படைக்கப்படுகின்றன. 'ஸ்வாஹா' என்று வேத மந்திரங்களினிறுதியில் வரும் ஒலி மறைந்து (நம) என்ற ஒலியே ஓங்கி இடம் பெறலாயிற்று. அவை ஆகுதிகள் இவை அருச்சனைகள்.

வைதிகக் கிரியையாகிய யாகங்களிலே வெளிவராது உருக்கரந்து அக்கினியில் மறைந்து நின்று நேரே பெற்றும், அக்கினி மூலமும் அவ்வப்போது பெற்றும் திருப்தி யடைந்த தெய்வங்கள் இங்கு கோவில்க ளிலே ஆகுதிக்கு இணையாகச் சமர்ப்பிக்கப் படும் நைவேத்தியப் பொருள்களை ஏற்று நிறைவுறுகின்றன.

மறைந்த நிலையில் உள்ள தெய்வங்க ளின் வழிபாடு வேதவழிபாடு. மறைந்து கண்ணுக்கு அறவே தெரியாத தெய்வங்க ளுக்கு வடிவந்தந்து உருவங்களை நிறுவி, மறைந்த தெய்வங்களை ஓரளவுக்கு அண் மையில் நிறுத்தி நடத்தும் வழிபாடு ஆகம மரபில் வந்த கோயில் வழிபாடு. சிறுதெய் வங்களெனப்படும் எண்ணற்ற தெய்வங்களை வேதகாலத்திற் போல் கற்பனையால் மட் டும் காணப்பட்டும் பெருந் தெய்வங்கள் வடிவம் பெற்று உரிய இடங்களில் நிறுவப் பட்டும் வழிபட்டு வரும் மரபைத் தேவா லயங்களில் தோற்றுவித்தது ஆகமவழிபாடு.

நினைத்த மாத்திரத்தே, தேவை எழும் வேளைகளிலே, ஒரு வேதிகையையோ ஸ்தண் டிலத்தையோ, யாகசாலையையோ அமைத்து தேவைக்காலத்தில் மட்டும் அக்கினியை நிறுவி வழிபடுவது தொன்மை மிகுந்த வைதிகவழி. இவ்வாறன்றி, நிரந்தரமான கோயில் கட்டி எழுப்பி கருவறையையும் மற்றைய உறைவிடங்களையும் உரிய இடங் களில் அமைத்து அவற்றில் அக்கினியை நிறுவுவதை விட்டு அவ்வம் மூர்த்திகளின் திருவுருவங்களை நிறுவி வழிபட்டும், வழி பாடு முடிந்ததும் அவற்றை அழித்து ஒழித்து விடாது அது என்றென்றும் தெய்வ சாந்நித்தியம் மிகுந்தவைகளாக விளங்கச் செய்து அங்கு எப்பொழுதும் வழிபட்டு வருவது ஆகமம் காட்டும் வழி.

இந்நிலையில், கோயில் வழிபாட்டு முறையில் அக்கினிக்கு இடமே இல்லை என் பது தெளிவாகத் தெரியுமிடத்தும், ஆகமங் கள் அக்கினியையும் வளர்த்து வழிபடுவ தற்கு இடமளிக்கின்றது. நாளடைவில் அக்நி வழிபாடு கோவில் வழிபாடோடி ணைந்து இன்றியமையாத அம்ஸமாயிற்று எனலாம்.

ஆகமங்கள் காட்டும் வழிபாட்டு நெறி யில் ஒரு உறுதியான, ஸ்திரமான, அமைப்பு இடம் பெறக் காண்கின்றோம். அவ்வப் போது, யாகசாலை அமைத்து, அங்கே அக் கினியை அரணி என்னும் கடை கோல் களால் கடைந்தெடுத்து குண்டங்களில் நிறுவி குறிப்பிட்ட தினங்கள் மட்டும் ஆகுதி கொடுத்து, வழிபாடு முடிந்ததும், தேவை பூர்த்தியானதும் அக்கினி வளர்க்கப்படும் யாகசாலையோ குண்டங்களோ இல்லாது அழிக்கப்படும் நிலை மாறி, கோவில்களை அமைத்து அங்கங்கே தெய்வங்களைப் பிர திட்டித்துச் "சூரிய சந்திர நட்சத்திரங்கள் இவ்வுலகில் நிலவும் வரை கோவில்களில் எழுந்தருளியிருந்து அநுக்கிரகிக்க வேண் டும்" என வேண்டித் தெய்வங்களை நித்திய நைமித்திகக் கிரியைகளால் வழிபடுவதையே ஆகாமங்கள் போதிக்கின்றன.

கோவில்களில் நித்தியம் நடைபெறும் வழிபாடு தேவைகளுக்கும் சந்தர்ப்பங்களுக் கும் ஏற்ப நைமித்திகங்களாகவும் காமியங் களாகவும் விரிவுறுகின்றன. இங்கு நித்தி யக் கிரியைகளை விதித்துக் கூறி கோயில்கள் என்றும் உயிர் மிக்க நிறுவனமாக எப் பொழுது விளங்கும் மரபை வகுத்துள்ளன ஆகமங்கள் வைதீக மரபோ நித்தியத்தின் பாற்படும் கிரியைகளை வீடுகளிலேயே தக்ஷி ணக்னி கார்ஹபத்தியம் ஆகவனீயம் என்று மூவகைப்படுத்தி வளர்த்தும் அதிலிருந்து எடுக்கும் அக்கினியையே சமிதாதானம் ஔபாசனம் என்னும் நித்தியக் கிரியை களுக்குப் பயன்படுத்தியும் நித்தியக் கிரியை களை ஒழுங்கு படுத்தியது. யாகாதி நைமித் திகக் கிரியைகளும் யஜமானன் என்ற வேட் பவன் ஒருவனின் நலம் கருதியே இயற்றப் படுகின்றன.

ஆகமங்களோ கோவில் என்ற நிறு வனத்தையே பொதுவாக்கியும் அத்துடன் நிரந்தரமாக்கியும் அங்கு நித்திய நைமித்

தியங்கள் செவ்வனே நிகழ வழிவகுத்து அவை உலக மக்கள் நலனுக்காகவே நிகழ்வன என்ற அடிப்படையில் வழிபாட்டு முறையையமைத்தது மட்டுமன்றி வழிபாட்டிறுதியில் தினன்தோறும் உலக முழுவதும் உய்யவ வேண்டும் எல்லோரும் நன்கு வாழ வேண்டும் என்றும் பொருள்பட "லோகா; சமஸ்தா; சுகினோ பவன்து" என்று உலக உயிர்கள் அனைத்தும் நலம் பெற வேண்டும் நோக்குடன் நிறைவேறும் பரார்த்த பூஜையை விதித்துக்கூறித் தம் நோக்கினை உலகுக்குத் தெரியத்தருகிறது.

வேதம், ஆகமம் ஆகிய இரு மரபுகளிலும் நித்திய நைமித்திகக் கிரியைகள் நிலவினும், இரண்டும் வெவ்வேறு அமைப்புக் கொண்டன. வெவ்வேறு முறைகளைக் கடைப்பிடிப்பன. கோயில் வழிபாட்டு மரபில், அமைப்பு விரிந்து சிறப்பாக அமையுமிடத்தும் இதில் அக்கினி வழிபாட்டுக்கு இடமே இராது ஒதுக்கியிருந்திருக்கலாம் ஆயினும் அவ்வாறு நிகழவில்லை அக்கினிக்கு உள்ள இடம் விரிவாகத் தனிக்கட்டுரையில் விவரித்தற்குரியது.

யாகாதிகள் நிகழும் வேத மரபில் தெய்வங்களை அக்கினி அழைத்து வருவதனுலும், சிலவேளைகளில் ஆகுதிகளை ஏற்று அவர்களிடம் சென்று சமர்ப்பிப்பதனுலும் அக்கினியில் ஆவாகனம் எனப்படும் நிகழ்ச்சிக்கோள கிரியை முடிந்ததும் வந்த இடத்திற்குத் திரும்பப் போகச் செய்யும் விசர்ஜனம் என்ற நிகழ்ச்சிக்கோ இடம் இல்லை. ஆயின், ஆகம மரபில், தெய்வங்கள் ஆவாகித்துப் பிரதிட்டிக்கப்பட்ட விக்கிரகங்களில் என்றென்றும் சாந்நித்தியமாக இருப்பதால் அறவே வேறு காரணங்கள் பற்றி இங்கும் ஆவாகனம் விசர்ஜனம் என்பன கிடையா. ஆனுல் ஆகமக் கிரியைகளில் நிகழும் அக்கினி வழிபாட்டில், ஆவாகித்தல் அதை ஆகுதிகள் கொடுத்து வழிபாடு நிறைவேறிய பின் போகவிடுத்தல் (ஒடுக்குதல்) இடம் பெறுவன.

ஆகம வழிபாட்டில் ஸ்திரமான நெறி ஒன்று உருவாகி கோவில்களை எல்லாம் அழியாத பொருள்களைக் கொண்டு கட்டியும், அங்கு நிறுவும் விக்கிரகங்களை உறுதியாக நிலைநிற்கும் வண்ணம் அமைத்தும் வழி வகுத்ததன் மூலம் உறுதிப்பாடான கோவில் வழிபாட்டை ஆகமங்கள் உருவாக்கின. இவ்வாறு, கட்டிட அமைப்பில் மட்டுமன்றி இவ்வுறுதிநிலை வழிபாட்டு மரபிலும் வளரலாயிற்று. கோயில் பெரும் நிறுவனமாகத் தலையெடுத்தது. தெய்வங்கள் நித்தியமே பொது மக்களின் வழிபாட்டுக்குரியவையாயின. இதைத் தொடர்ந்த வழிபடு மரபும் ஏற்ற வகையில் விரியலாயிற்று.

தெய்வங்களுக்கு கை கால் முதலிய சரீர அமைப்புக்களை எங்களுக்கு ஏற்ற வேறு பெரும்பாலும் தந்து அவற்றின் தெய்வத்தன்மையையும் குறைபடாத வகையில் அமைத்து, வடிவமைத்து வழிபடுவதன் மூலம் ஆகமங்கள் எங்களைத் தெய்வங்களை அண்மிக்க வைத்ததோடமையாது, எங்களுக்குரியதான, ஸ்நாநம், பானம் முதலியவற்றைக் கிரியா ரூபமாக அவற்றுக்கு நிகழ்த்துவித்தும், இன்னும் நெருக்கத்தை ஏற்படுத்தின. எனினும், தெய்வங்கள் நிலை எங்கள் நிலையினின்றும் வேறுபடுவதால் இவ்வகை வழிபாட்டம்சங்களும் சீராக்கப்பட்டு ஒழுங்குபடுத்திய சீரிய கற்பனையையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டவை உதாரணமாக ஸ்நாநம் என்னும் கிரியை குளித்தல் நீராடல்) ஆகிய மக்களின் அன்றன்றுட நிகழ்ச்சியேயாகினும் மக்கள் குளிக்கும் (நீராடும்) முறை வேறு, தெய்வங்கள் குளிக்கும் முறை வேறு, என்ற வகையில் ஸ்நாநம் அமைந்துள்ளது. மக்கள் நீரில் மட்டும் நீராடுவார்கள் சில வாசனைத் திரவியங்களைச் செல்வ நிலைக்கேற்பச் சேர்ப்பதுமுண்டு தெய்வங்களுக்கு நிகழும் நீராட்டு வைபவங்களில் அபிடேகம் என்னும் கிரியை குறிப்பிட்ட பொருள்களால் வைரிசப்படி நிகழும் இங்கு எண்ணெ, அரிசி மா, நெல்ல மா, மஞ்சள், பஞ்சசவ்யம், பஞ்சாமிருதம் பால், தயிர், தேன், நெய், கருப்பஞ்சாறு, பழங்களின் சாறு, இளநீர், அன்னம், விபூதி, குங்குமம், சந்தனம், பன்னீர் என்ற

பொருள்களால், மக்கள் நீராடும் பொழுது பயன்படுத்தாத பல பொருள்களால் அபிடேகம் நிகழும் நிவேதனமும் இவ்வாறே விலக்கப்பட்ட பொருள்களை நீக்கி விதிக்கப்பட்ட பொருள்களை சமர்ப்பிப்பதன் மூலம் நிகழும். வேத மரபில் கண்ணுக்கு மறைவான தூரத்தில் தெய்வங்கள் இருப்பதனுலல்லவா இவ்வழிபாடு விரிவு பெருது விட்டன. இச்சந்தர்ப்பத்தில் நாம் கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விஷயம் ஒன்றுண்டு. எங்கள் அண்மையில் இருக்கும் தெய்வம் சிலைவடிவில் அமைந்திருப்பது மட்டுமல்ல. உடலில் உயிர் வியாபித்து இருப்பது போல் இச்சிலைகளில் தெய்வங்களே எழுந்தருளி வியாபித்து இருக்கின்றன. தெய்வங்கள் சிலையில் எழுந்தருள்புரிகின்றன விக்கிரகங்களை வழிபடும் ஒவ்வொரு இந்து சமயியும் வெறும் சிலைகளை வழிபடவில்லை. அங்கு நித்தியமாக என்றென்றும் எழுந்தருளி அருள் பாலிக்கும் தெய்வங்களையே வழிபடுகிறான். இதனுல் இத் தெய்வங்களிடம் பிணிப்பு ஏற்படுகின்றது. இது வழிபாட்டு மரபில் ஒரு புதிய அம்சத்தைத் தோற்றுவிக்கின்றது. இப்பிணிப்பு இறுக இறுக பக்தியாகப் பரிணமிக்கின்றது.

பக்தி ஆகம வழிபாட்டின் உயிர் நாடி. பக்தியடிப்படையிலேயே கோவிற் கிரியைகள் மேற் கூறியவாறு விரிந்தன. மேலும் விரிவடைகின்றன. தெய்வத்திற்கு நிகழ்த்தும் ஸ்நாநம், பானம் நைவேத்யம் எல்லாமே பக்தி அடிப்படையிலேயே உருவாகி விரிந்தன. இது மட்டுமா? கோயில்களிலே பள்ளியறையொன்று நிறுவி, தினந்தோறும் இரவு இறுதியான அர்த்தயாமப் பூஜை நிகழ்ந்ததும், சுவாமியை அங்கு எழுந்தருளித் துயில வைப்பதும், காலை துயிலெழச் செய்து வலமாக இருப்பிடத்துக்கு ஏகச் செய்வதும் ஒவ்வொரு நாளும் நிகழும் கிரியை. சுருங்கக் கூறின் வழிபடுபவனையும் தெய்வத்தையும் நெருக்கமாகப் பிணிக்கும் பக்தி வழியைப் புகட்டும் சிறந்த இடங்களாகக் கோவில்கள் திகழ்கின்றன, மேலும் பலவகைப்பட்ட கலைகள் வளரும் இடமாக உருவெடுத்த கோயில்கள் என்றுமே உயிரோட்டம் நிறைந்தவையும் உற்சாகம் பெருக்குவையுமான தலங்களாகவும் திகழ்ந்து வருகின்றன.

மேலும் பக்தியடிப்படையில் மன்னர் பரம்பரையினர், முக்கியமாகச் சோழ மன்னர் பிரமாண்டமான கோயில்கள் நிர்மாணித்து அவை இயங்க வேண்டிய வழிவகைகளை அமைக்கும் போது கோவில் வழிபாட்டு முறையில் இன்னும் விரிவையும் சிறப்பையும் காண்கின்றேம். சோழ மன்னர்கள் தங்களுடைமை முழுவதையுமே இறைவனுக்கு அர்ப்பணித்தார்கள். தம் பொருள் முழுவதையுமே கோவிற் திருப்பணிக்குச் செலவிட்டார்கள். கோவில்களை அரண்மனைகளாகக் கட்டியெழுப்பினுர்கள். தங்களுக்கு நிகழும் மரியாதைச் சிறப்புக்களை இறைவனுக்கே உரியனவாக்கினுர்கள். இதனுல் அரியாசனையில் அமர்ந்து கொலுவீற்றிருத்தல், சாமரை இரட்டல், குடை பிடித்தல் தீவெட்டி முதலிய எடுபிடிகள், விலையுயர்ந்த ஆடை ஆபரணுதிகளால் அலங்கரிக்கப் பெறுதல் கோலாகலமாக வீதிகளில் பவனி வருதல் தெய்வங்களுக்கு உரிய உபசாரங்களாக தெய்வங்களுக்கு உரியனவாக விளங்கின. இவ்வாறு பக்தி அடிப்படையில் தொடங்கிய பஞ்சோபசாரங்கள் ஷோடசோபசாரங்களாக விரிந்து அம்பிகைக்கு நிகழ்த்தப்படும் வேளை 64 உபசாரங்களாகப் பெருகுகின்றன.

இந்த வழிபாட்டு முறை பொது இடங்களான கோயில்களில் பொது மக்களின் நன்மைக்காக நடத்தப்படுவது. இது பரார்த்த பூஜை என்று பெயர் பெறும். ஆயினும் இவ்வாறே சக்திக்கேற்ப வழிபாடு வீடுகளிலும் நடைபெறுதல் வேண்டும் என முறைகள் கூறிய விடத்தும், அது சிறிது சிறிதாகக் கைவிடப்பட்டு பெரும்பாலும் மறைந்துவிட்டது. வீட்டில் செய்யும் பூஜையை ஆத்மார்த்த பூஜை என்றும் கோயிலில் நிகமும் பூஜையை பரார்த்த பூஜை என்றும் ஆத்மார்த்த பூஜை எல்லோரும் செய்தல் வேண்டும் என்றும் ஆத்மார்த்த பூஜைக்குப் பின்னே அதற்குரியவரும் பரார்த்த பூஜையில் ஈடுபடலாம் என்றும் விதிகள் உள்ளன.

வைதிக மரபோ வழிபாடு பெரும்பாலும் ஆத்மார்த்தமாகவே இருந்தது என்றும், பெரும் பொருள் கொண்டு தனிகர், அரசர் முதலியவர்கள் நிகழ்த்துவிக்கும் பொழுது மட்டுமே அது பரார்த்தமாக அமைந்தது என்றும் கொள்ளுவதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு.

இவ்வாறு பரார்த்த பூஜை நிகழ்வதற்கு ஆலயம் கட்டி எழுப்பப்பட வேண்டும். ஆலயத்தில் சகல உபகரணங்களும் இடம் பெறல் வேண்டும். விக்கிரகங்கள் உரியவாறு முறையாக நிறுவப்பட வேண்டும். விக்கிரகங்கள் விதிப்படி பிரதிட்டிக்கப்படல் வேண்டும். இவ்வாறு ஆலயங்களில் விதிப்படி விக்கிரகங்களை பிரதிட்டிக்கும் கிரியையே கும்பாபிஷேகம் என்கிறோம். மிகவும் விரிந்ததானதும் பல தத்துவங்களை அடக்கியும் விளங்குவது கும்பாபிஷேகக் கிரியையாகும். அது தனிச்சிறப்பு வாய்ந்தது. எப்போதாவது நிகழ்வது. கோயில் பழுதடைந்த நிலையிலும் சுவாமியை பாலஸ்தாபனம் செய்து திருத்தியமைத்த பின் கும்பாபிஷேகம் செய்வது மரபு. இது ஜீர்ணோத்தார மகா கும்பாபிஷேகம் எனப் பெயர் பெறும்.

# இலங்கையில் சைவ சமயமும் மக்களும்

கார்த்திகேசு. குகபாலன்
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்*

இந்து சமயம் காலத்தால் முந்தியது, கருத்தில் ஆழமிக்கது. உலகில் உள்ள முக்கியமான பிறசமயங்களோடு ஒப்பிடும்போது இம்மதத்திற்கு ஒரு தனித்துவம் உண்டு. இந்துசமயம் என்றால் என்னவென்று வரையறுத்துக் கூற முடியாமையே அது இந்து சமயத்திலுள்ள பல்வேறு கிளைகளில் சைவமும் ஒன்று. தொல் பொருளியலாளரான சேர் ஜோன் மார்சல் என்பவர் சைவசமயத்தின் ஆரம்பநிலை இந்து வெளி நாகரிகத்தில் காணப்படுகின்ற தென்பார் வரலாற்று ஆசிரியரான நீலகண்டசாஸ்திரி போன்றோர் இந்துசமயத்தின் தோற்றுவாய் வேதகாலத்துக்கு மட்டுமே போகின்றதென்பர். அவை வேதகாலத்துச் சமயமான சைவ... ...ம் உள்ளிட்ட பிரா ... மானிட

முதலியோரின் பெயர்களை மகாவம்ச நூலில் மூத்தசிவன், ஐயா சிவன், மகாசிவன், ஸ்ரீகண்டசிவன் போன்ற சிவன் பெயர்களைத் தாங்கியிருந்ததை அறியமுடிகின்றது எனவே அக்காலங்களிலேயே சிவ வழிபாடு இருந்துள்ளது என்பதை நாம் உணரலாம். அத்துடன் கி.பி. 7ம் நூற்றூண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரும், 8ம் நூற்றூண்டில் வாழ்ந்த சுந்தரரும் தனித்தனியாக திருக்கேதீஸ்வரத்தானையும், திருக்கோணேஸ்வரத்தானையும் நினைந்து பதிகம் பாடியுள்ளமை இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சைவ சமயத்தில் மக்கள் கொண்டிருந்த ஆர்வத்தினையும் ஆலயங்களின் சிறப்புத் தன்மையினையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இதன் பயனாக இலங்கையின் வடபகுதியில் சைவ மா...

ஒடுக்குவதன் மூலமும் தம் மதத்தைத்தழுவச் செய்வதில் ஆர்வம் காட்டினர். யாழ்ப்பாணத்தில் முதலாவது போர்த்துக்கீச ஆள்பதியான 'டீ ஒலிவேரா' தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களைக் கத்தோலிக்கராக்கும்படி கட்டாயப்படுத்தினும் தண்டனைக்கு அஞ்சி தமது வாழ்வில் ஒழிவு மறைவாக சைவ மத அனுஷ்டானத்தைக் கடைப்பிடிப்பவர்களாகவும் வெளியில் கத்தோலிக்கராக வாழவேண்டிய அவலநிலை காணப்பட்டது. குறிப்பாக விரத நாட்களில் பயன்படுத்திய வாழையிலைகளைக்கூட வெட்டிப் புதைக்கும் நிலையிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. போர்த்துக்கீசர் தமது ஆதிபத்தியத்தை ஸ்திரப்படுத்தும் நோக்குடன் ஈழத்தின் கரையோரப் பகுதிகளிலிருந்த சைவக் கோவில்களில் பெரும்பாலானவற்றை இடித்துத் தரைமட்டமாக்கினர்.

ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய இரு பிரிவினரும் போர்த்துக்கீசர் போன்று இல்லாவிடினும் பாதிரிமார்களூடாக மத மாற்றத்தை உற்சாகப்படுத்தினர். இதற்கு அரச ஆதரவு வெளிப்படையாக இருந்தது. மேற்குறித்த மூன்று வெளிநாட்டவரும் கத்தோலிக்கமதம், ஏனைய கிறீஸ்தவ மதங்கள் ஆகியன வறுமைப் பிடியில் வாழ்ந்த மக்களிடையேயும், உயர்கல்வி, தொழில் வாய்ப்பைப் பெறும் நோக்கமுடையோர்களிடையேயுமே பெருமளவிற்கு உள்நுழைவை ஏற்படுத்தியிருந்தன. ஒல்லாந்தர் காலத்தில் விதிக்கப்பட்ட சட்டங்களின் கட்டுப்பாடுகளினலும் பொது வழிபாடுகள் நடைபெறுதொழிந்தன.

ஆனல் ஆங்கிலேயர் ஆட்சியில் பொது வழிபாட்டுத் தடைச்சட்டத்தை நீக்கி மக்களின் நன்மதிப்பைப்பெற சமய சுவாதீனக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். இதன் விளைவாக போலிக் கிறீஸ்தவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது. எனவே இக்காலப்பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட கோவில்கள் தனிப்பட்ட பிரிவினர்களின் சொந்த முயற்சியால் உருவாகின. உயர்சாதியினரால் கட்டப்பட்ட கோவில்களில் தாழ்ந்த சாதியினர் எனக் கருதப்படுவோர்களை வணங்கவிடாமல் தடுக்கும் நிலை காணப்பட்டமையால் ஒவ்வொரு சாதியினரும் தமக்கு இஷ்டமான தெய்வங்களுக்கும், தேவதைகளுக்கும் கோவில் கட்டினர். சாதியடிப்படையில் மக்கள் கோவில்களைக் கட்டியதன் விளைவாக ஆங்கிலேயர் காலத்தில் சைவர்கள் வாழ்ந்த இடங்களில் புரட்டஸ்தாந்து, கிறீஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் சாதகமாக இருந்துள்ளன. இக்காலப் பகுதியில் ஏற்பட்ட சமய மாற்றத்திற்கான காரணங்களாக 1833 இல் கோல்புறூக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையாகக் கொண்டு நிர்வாகத்தில் இலங்கையருக்கு பங்கு கொடுப்பதற்கு ஆங்கிலக்கல்வியின் அவசியம் வேண்டப்பட்டமையால் கிறீஸ்தவப் பாடசாலையினை நாடியமையும், உத்தியோக வாய்ப்பும், சைவர்கள் வாழ்ந்த சில பகுதிகளில் பொருளாதாரக் கஷ்டநிலையும் வேறு மதத்தினை நாடவேண்டியநிலை ஏற்பட்டது.

16 ஆம் நூற்றுண்டுதொட்டு 18 ஆம் நூற்றுண்டு வரை பல்வேறு வழிகளில் நசுக்கப்பட்டு வந்த சைவசமயம் 19 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதிகளிலிருந்து புத்துயிர் பெற்று எழுச்சியுறுவதைக் காணலாம். அதாவது தத்தமது மரபு ரீதியிலான கல்வி நிறுவனங்கள் இல்லாமையே மதமாற்றத்திற்கு ஆளாக வேண்டியுள்ளதென்பதை சைவப் பெருமக்கள் உணரத் தலைப்பட்டனர். இதனல் சைவமதக் கல்விக் கூடங்களைக் கட்டி எழுப்பும் முயற்சியில் முன்னின்று உழைத்தவர்களில் பிரதானமானவர் ஆறுமுகநாவலர் அவர்களாவர். சைவப் பாடசாலைகளை நிறுவுதல், சமயப் பிரசங்கங்களைச் செய்தல், சைவமும் தமிழும் தொடர்பான நூல்களை ஆக்கல், மதத்தின்பால் அன்பு கொள்ளச் செய்தல் போன்ற பலவற்றின் மூலம் சைவத்தின் பாதுகாவலனகத் திகழ்ந்தார். அவரைத் தொடர்ந்து சேர் பொன் இராமநாதன் சகோதரர்களும் மற்றும் பலரும் சைவசமயத்திலிருந்து எவ்வெவ் வழிகளின் மூலம் மதம் மாற்றினர்களோ அதேபோல மதம் மாறலைத் தொடர்ந்து தடுக்க சைவத்திற்கும் கல்விக்

குமிடையில் நெருங்கிய தொடர்புகளேற் படுத்தி வெற்றி பெற்றனர். குறிப்பாக வடமாகாணக் கல்வியைப் பொறுத்தவரை அரசின் அக்கறையின்மையைச் சுட்டிக் காட்டி ஏனைய மாகாணங்களைப்போல இங்கும் ஆங்கிலப் பள்ளிகளையும் ஆங்கில, சுய மொழிப் பள்ளிகளையும் அமைக்கக்கோரி பெருமளவிற்கு வெற்றிபெற்றனர் எனலாம். அதற்கு முன்னோடியாக சேர் பொன் இராமநாதன் அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியையும், இராமநாதன் பெண்கள் கல்லூரியையும் நிறுவி வழிகாட்டினார்.

சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுப்பதற்கு 1888 இல் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையினை நாவலரின் மருகனை வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளையும் வேறு பலரும் சேர்ந்து ஸ்தாபித்தனர். இவர்களைத் தொடர்ந்து பலரும் சைவசமய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றினர் இவர்களின் முயற்சியால் 1890இல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது 1923 ஆம் ஆண்டு டிசம்பரில் சைவ வித்தியாவிருத்திச் சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டு சைவமத வளர்ச்சிக்கு வழிகாட்டினர். அத்துடன் கொழும்பில் இராமகிருஷ்ணமிசன் சங்கமும் ஆரம்பித்து சைவம் வளர்த்தனர். இவர்களைத் தவிர இலங்கையில் 19 ஆம் நூற்றுண்டிற்கு முன்னரிலும் பார்க்க பின்னர் சைவத்தினைப் பேணிக்காத்தவர்களில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர். குறிப்பாக பசுபதிச் செட்டியார், வைத்திலிங்கச் செட்டியார் போன்றோர் முருகனுக்கும் சிவனுக்கும் கோவில் கட்டி மகிழ்ந்ததை வரலாறு கூறுகின்றது.

1948 இன் பின்னர் மதம் மாறுதல்நிலை பெருமளவிற்கு நீங்கிய போதிலும் 1970 ஆம் ஆண்டுகளில் வடமாகணத்தின் சில பகுதிகளில் திட்டமிட்ட ரீதியாக ஒரு சில குடும்பங்களைப் பௌத்தர்களாக மாற்றியமை இங்கு குறிப்பிட வேண்டும். அது மட்டுமல்லாது கிறீஸ்தவ சமயங்கள் வறியோர்களிடையேயும் அனுதைகளிடையேயும் உள்நுளைவைப் ஏற்படுத்தி தம்மதம் மாற்றும் நிகழ்வு இலைமறை காய் போல தொடர்வதைக் காணலாம். குறிப்பாக மலையகப் பகுதிகளிலும், பின்தங்கிய பகுதிகளிலும் இடம்பெறுகின்றன. எனினும் இவற்றிற்கான புள்ளி விபரங்களைப்பெற முடியவில்லை. இத்தகைய நிகழ்வுகள் சைவ சமயத்தைப் பெருமளவில் பாதிக்கவில்லை. அண்மைக் காலங்களில் பௌத்த சிங்கள கலாச்சாரத்தைப் பேண அரசு ஆர்வம் கொண்டிருப்பது போல இந்துசமயத்தைப் பேண தனி அமைச்சு நிறுவி அதனூடாக இந்துமதப் பண்பாட்டிற்கு பல முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இலங்கையில் 198 ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி மொத்த மக்களில் 15 5 வீதத்தினரே இந்துக்களாவர். இந்நிலை 1871 ஆம் ஆண்டுக் கணிப்பீட்டில் 19.4 வீதமாகவிருந்துள்ளது. ஆனுல் 1921 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக இந்துக்களின் விதாசாரம் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்வதைக் காணலாம். (அட்டவணை 1) ஆங்கிலேயரின் பொருளாதாரக் கொள்கையின் விளைவாக தென்னிந்தியாவிலிருந்து இந்துசமயத்தைத் தழுவிய தமிழரின் வருகை அதிகமாகவிருந்தமையால் 19ஆம் நூற்றுண்டின் பின்னரைப் பகுதியிலும் 20 ஆம் நூற்றுண்டின் முதற் காற் பகுதியிலும் இந்துக்கள் அதிகாமாகவிருந்துள்ளனர். எனினும் 1948, 1949 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றம்பட்ட இந்திய பாகிஸ்தானியச் சட்டம், இலங்கை பிரசாவுரிமைச் சட்டம் ஆகியனவும், 1964 லும் 1974 லும் ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தம், ஸ்ரீமாவோ - இந்திரா ஒப்பந்தம் ஆகியனவும் இந்தியத் தமிழரை தாயகம் திரும்ப வழிவகுத்தது. இதன் விளைவே இந்துக்கள் குறைவடைந்து செல்லக்காரணமாகவிருந்துள்ளது. அத்துடன் இலங்கை வாழ் இந்துக்களின் வெளிஇடப்பெயர்வு, ஏனைய மதத்தவர்களோடு ஒப்பிடும்போது மதம் மாறும் இயல்பு காணப்படுகின்றமை போன்றனவும் தமது பங்கினைச் செலுத்தாமலில்லை.

இலங்கையில் வாழும் இந்துக்களை மாவட்டரீதியாக நோக்கின் தமிழர் தாயக மான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 50. 7 வீதத்தினர் வாழ்கின்றனர். கொழும்பு மாவட்டத்தில் 5. 6 வீதத்தின ரும் மலையகமாவட்டங்களான கண்டி, நுவரேலியா, பதுளை, இரத்தினபுரி ஆகிய வற்றில் முறையே 5.9, 12.7, 7.0, 4.1, வீதமான இந்துக்கள் வாழ்வதைக்காண லாம். ஏனையோர் ஏனைய மாவட்டங்களில் காணப்படுகின்றனர். (அட்டவணை II)

**அட்டவணை I**

இலங்கையில் இந்துக்கள் 1871 — 1981

| ஆண்டு | பௌத்தர் | இந்துக்கள் | முஸ்லீம் | கிறீஸ்தவர்கள் |
|---|---|---|---|---|
| 1871 | 63. 1 | 19. 4 | 7. 1 | 10. 1 |
| 1881 | 61. 5 | 21. 5 | 7. 2 | 10. 0 |
| 1891 | 62. 4 | 20. 5 | 7. 0 | 9. 7 |
| 1901 | 60. 1 | 23. 2 | 6. 9 | 10. 0 |
| 1911 | 60. 5 | 22. 8 | 6. 9 | 9. 8 |
| 1921 | 61. 6 | 21. 8 | 6. 7 | 9. 1 |
| 1946 | 64. 5 | 19. 8 | 6. 6 | 8. 9 |
| 1953 | 64. 3 | 19. 9 | 6. 7 | 8. 4 |
| 1963 | 66. 2 | 18. 5 | 6. 8 | 7. 8 |
| 1971 | 67. 4 | 17. 6 | 7. 1 | 7. 7 |
| 1981 | 69. 3 | 15. 5 | 7. 5 | 7. 6 |

ஆதாரம். குடித்தொகைக் கணிப்பு அறிக்கைகள்

**அட்டவணை II**

மாவட்டரீதியாக இந்துக்கள் 1981
(வீதம்)

| மாவட்டங்கள் | இலங்கையில் மாவட்ட ரீதியாக இந்துக்கள் | மாவட்டத்திற் குள்ளே வாழும் இந்துக்கள் |
|---|---|---|
| வடக்கு கிழக்கு-மாவட்டங்கள் | 50. 7 | 59. 3 |
| யாழ்ப்பாணம் | 30. 7 | 85. 0 |
| மன்னார் | 1. 2 | 25. 3 |
| வவுனியா | 2. 9 | 69. 6 |
| முல்லைத்தீவு | 2. 6 | 78. 6 |
| மட்டக்களப்பு | 9. 6 | 60. 4 |
| திருகோணமலை | 3. 6 | 31. 9 |
| அம்பாறை | 0. 07 | 0. 4 |
| கொழும்பு | 5. 6 | 7. 6 |
| மலையக மாவட்டங்கள் | | |
| கண்டி | 5. 9 | 11. 9 |
| நுவரெலியா | 12. 7 | 55. 6 |
| பதுளை | 7. 0 | 25. 6 |
| இரத்தினபுரி | 4. 1 | 11. 9 |
| ஏனையமாவட்டங்கள் | 14. 0 | — |

அட்டவணை II இன்படி தமிழரின் பாரம் பரியப் பிரதேசங்களிலும், மலையகத்திலுமே அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். கொழும்பு மாவட்டத்தில் வாழும் இந்துக் கள் பல்வேறு பொருளாதார, சமூக, அரசி யல் காரணிகளின் நிமித்தம் அங்கு சென் றுள்ளனர் எனலாம்.

வடக்கு கிழக்கு மாவட்டங்களில் மாவட்டத்திற்குள்ளேயான இந்துக்களின் பரம்பலைப் பொறுத்தவரை யாழ்ப்பாண மாவட்டமே இலங்கையில் அதிகளவிலான

இந்துக்களைக் கொண்டிருக்கின்றனர். அதாவது நாட்டில் வாழும் இந்துக்களில் 30.7 வீதத்தினரும் மாவட்டத்துள் வாழும் மக்களில் 85.0 வீதத்தினரும் இந்துசமயிகளே. இம்மாவட்டத்தில் வரலாற்றுக்காலமாக சைவமும் தமிழும் ஒருங்கே செழித்தோங்கிக் காணப்பட்டதாக பல்வேறு வரலாற்று, தொல்பொருளியல், மற்றும் இலக்கியச் சான்றுகளும், புவியியல் நிலைப்பாடும் தெரிவிக்கின்றன. எனினும் காலத்துக்கு காலம் இந்துமதம் சோதனைக்குள்ளானதாக தெரியவருகின்றது. குறிப்பாக போர்த்துக்கீசரின் வருகையின் பின்னர் இந்துக்கள், கத்தோலிக்கமதம் மற்றும் கிறீஸ்தவ மதங்களின்பால் ஈடுபாடு கொள்ளப் பல்வேறு வழிகளில் தூண்டப்பட்டது. 1981 ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி கத்தொலிக்கமும் கிறீஸ்தவர்களும் 12.6 வீதமாகவும் இஸ்லாமியர், பௌத்தர்கள் முறையே 1.8, 0.6 வீதத்தினராகவுமுள்ளனர். யாழ்ப்பாண நகரப்பகுதியில் முஸ்லிம் வட்டாரங்களில் பெருமளவில் இஸ்லாமியரும் மாவட்டத்தின் மீன்பிடிக்கரையோரப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இந்துக்களும் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

வன்னி மாவட்டங்களான வவுனியா, மன்னார், முல்லைத்தீவுப் பிரதேசங்களில் குடிப்பரம்பலைப் பொறுத்தவரை குழுமிய குடியிருப்புகளாக வேயுள்ளன. அதே போலவே இந்துக்களின் பரம்பலும் ஆங்காங்கே காணப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோரக் குடியிருப்புகளில் பெரும்பாலானோர் கத்தோலிக்கர்களாகவும் உள்நோக்கிய குடியிருப்புகளில் இந்துக்கள் அதிகமாகவும் உள்ளனர். குறிப்பாக புதுக்குடியிருப்பு, கரையோரப்பற்றின் உட்பிரிவு, துணுக்காய், மாந்தை கிழக்கு பகுதிகளில் இந்துக்களே அதிகமாகவுள்ளனர். வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை வவுனியா தெற்கு சிங்களப்பிரிவு தவிர்ந்த ஏனையபகுதிகளிலும் மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு, நானாட்டான் மன்னார் உதவி அரச அதிபர் பிரிவுகளில் கணிசமான இந்துக்கள் காணப்படினும் மாந்தை மேற்கிலேயே எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளனர். ஏனையபிரிவுகளில் முஸ்லிம்கள் கத்தோலிக்கர்களுடன் இணைந்து வாழும் பண்பு காணப்படுகின்றது. அதாவது மன்னார் மாவட்டத்தின் கரையோரம் சார்ந்த பகுதிகளில் இந்துக்களின் பரம்பல் குறைவாகவும் உள்நோக்கிச் செல்லச் செல்ல அங்குமிங்குமாக குழுமிய குடியிருப்பினை ஏற்படுத்தியிருப்பதைக் காண முடிகின்றது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை எல்லா உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் இவர்கள் பரந்து வாழ்கின்றனர். எனினும் மண்முனை தெற்கும் எருவில் போரதீவுப் பற்றிலும், மண்முனை தென்மேற்கும் எருவில் போரதீவுப் பற்றிலும், ஏறாவூர் பற்று, மற்றும் கோறளைப் பற்றிலுமே அதிகளவில் இந்துக்கள் வாழ்வதைக் காணலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் மொத்த மக்களில் 85 வீதத்தினர் கடற்கரையோரம் சார்ந்து வாழ்வதுடன் முஸ்லிம்களும் இந்துக்களும் தனித்தனிப்பிரிவுகளாக வாழ்வது இங்கு அவதானிக்கக் கூடிய சிறப்பம்சமாகும். பண்டைய மட்டக்களப்பு சைவர்கள் முருகக் கடவுளுக்கும், விநாயகக் கடவுளுக்கும் காட்டும் வழிபாட்டின் மூலமே சிவனை வணங்கினர் எனத் தெரியவருகின்றது கி.பி 2 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே மட்டக்களப்பில் சைவம் தழைத்தோங்கியது. மட்டக்களப்பு மான்மியத்தின்படி கி.பி 2 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட மகாசேனன் ஆட்சியில் கிழக்கிலங்கையை அரசு செய்த ஆடகசௌந்தரி என்னும் இளவரசியால் மாமாங்கக் கோவிலும் தீர்த்தக்குளமும், சீர் செய்யப் பெற்றன. அதே போல கி.பி 4 ஆம் நூற்றாண்டில் மண்ணேறுமுனை (மண்முனை) யில் இருந்து அரசு செய்த கலிங்ககுமாரியான உலகநாச்சியினால் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் கண்டுபிடித்து அமைக்கப்பெற்றது என அறிய முடிகின்றது. எனவே மட்டக்களப்பும், யாழ்ப்பாணத்தைப் போலவே சைவம் வளர்த்த பிரதேசமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் வாழும் இந்துக்களில் 94. 5 வீதமானோர் திருக்கோவில். அக்கரைப்பற்று கரைவாப்பற்று, சம்மாந்துறை, நிந்தாவூர் பொத்துவில், கல்முனைநகரம் ஆகிய உதவி அரச பிரிவுகளில் வாழ்ந்து வரினும் இந்துக்கள் வாழும் நிலப்பரப்பும் அவர்கள் தம் பொருளாதார முயற்சியும் மிகச் சிறியதே.

திருகோணமலை மாவட்டம் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து இந்துசமயம் மக்களால் போற்றி பாதுகாக்கப்பட்ட பிரதேசமாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது ஈழத்தில் பொலிவுற்று விளங்கிய ஐந்து ஈச்சரங்களில் கோணேச்சரமும் ஒன்று எனக் கலாநிதி பவுல்பீரிஸ் கருதுகின்றார். கோணமாமலையில் அமர்ந்த பெருமானை இராவணன் வழிபட்டு வந்தான் என சொல்லப்படுகிறது. ''கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலைய மர்ந்தாரே'' என 7 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் கூறுவது அப்பிரதேச மக்கள் இந்துமதத்தில் கொண்டிருந்த உறுதிப்பாட்டினையே தெரிவிக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து இன மத ரீதியிலான பரம்பலில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி வருகின்றது. தற்போதைய நிலையில் பௌத்தம், இந்து, இஸ்லாம் மதத்தவர்கள் ஏறத்தாழ சமமாகக் காணப்படுகின்றனர். இந்துக்களின் பரம்பலைப்பொறுத்தவரை திருகோணமலை நகரமும் கரையோரப்பற்றும், குச்சவெளி, தம்பலகாமம், கிளிவெட்டி, மூதூர், தென்னைமரவாடி, புல்மோட்டை போன்ற பகுதிகளிலேயே மொத்த இந்துக்களில் 91.4 வீதத்தினர் வாழ்கின்றனர். மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 10-15 வீத நிலப்பரப்பே இந்துக்களுக்குரியது. அதேவேளை ஏறத்தாழ 70 வீதமான நிலப்பரப்பில் மொத்த மக்களில் மூன்றிலொரு பங்கினரான பௌத்தர்கள் தமது குடியிருப்புக்களை அமைத்து வாழக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, இந்துமதம் பல்வேறு சவால்களூடாக தனித்துவம் பேணப்பட்டு வருகின்றது. இன்றும் கூட ஏனைய மதங்களுக்கில்லாத நெருக்கடிநிலை இம்மதத்திற்கேயுண்டு. குறிப்பாக இந்துமதத்தவர்கள் ஏனைய மதங்கள் மீது கவர்ச்சியுள்ளவர்களாயுள்ளனர். குறிப்பாக மக்களின் பொருளாதார, சமூக, கலாச்சார, கஷ்ட நிலையினைப் போக்கும் பொருட்டு சில மதவாதிகள் சர்வதேச தம் மத நிறுவனங்களூடாக பொருளாதார, மற்றும் சமூக உதவிகளை வழங்குவதன் மூலம் தம் மதம் மாற்றும் செயல்கள் எம்மிடையே இலைமறை காய் போல் காணப்படுவது இங்கு நோக்குதல் அவசியமாகும். இவற்றிலிருந்து இந்துசமயத்தவர்கள் மிக விளிப்பாக இருத்தல் வேண்டும் இலங்கையில் சைவத்தை நெறிப்படுத்தவும் சைவசமயிகளின் பொருளாதார, சமூக, கலாசார பிரச்சினைகளை தீர்க்கவும் பொதுநோக்கங் கொண்டதும் சிறப்பானதுமான சமய நிறுவனங்கள் ஏற்படுத்தப்படல் இன்றைய நிலையில் அவசியமானதாகும்

மனிதன் ஒருவன்தான் சிரிக்கும் தகுதிபெற்றவன் என்று கூறுகின்றுர்கள், அதேநேரத்தில் பிறர்பார்த்துச் சிரிக்கக்கூடிய நிலையுள்ளவனும் அவன்தான்.

- ஹிரிவெல

# விநாயகர் விசுவரூபம்

சித்தாந்த சிகாமணி, வித்துவான்,
பொன். அ. கனகசபை

இலங்கை விராட்புருடனது இயை நாடி என எடுத்துப்பேசப்படும் பெருமையுடையது. இராமாயண இதிகாச நிகழ்ச்சிக்கு இது இதயத் தானமாய் இருந்தது. இந்த இதிகாசப் புகழ் பெற்ற இலங்கையை ஆண்ட வேந்தனே இராவணன் இவன் நாத உபாசனை செய்து சிவபெருமானைத் தரிசித்த சிவபக்தன்; வாரணம் பொருத மார்பன்; வலிய குன்றெடுத்த தோளன்; இத்தகைய வீரனைக் கொன்ற பாவம் வீரகத்தி தோஷமாய் இராமனை விடாது தொடர்ந்து வருத்தியது. வீரகத்தி தோஷத்திலிருந்து இராமனை விலக்கியருளியவர் வீரகத்தி விநாயகர் விசுவரூபம் கொண்டு இராவணனுடைய வீர மானத்தைப் போக்கி அவனை ப்பரவிப் பணியச் செய்தவர் பஞ்சமுக விநாயகர். வீரகத்தி விநாயகராக, பஞ்சமுக விநாயகராக எழுந்தருளிக் காட்சி கொடுத்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் திருத்தலமே அரிய நாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலயம். அருள் திருவுடைய இவ்வாலயப் புனராவர்த்தன மகா கும்பாபிஷேக மலரில் விநாயகர் விசுவரூபம் பற்றிச் சிந்திப்பதும் ஞானபூசையேயாகும்.

## சிவனே விநாயகர்:

சிவம் சச்சிதானந்த சொரூபம், உண்மை, அறிவு, இன்பவடிவே அதன் அநாதி உண்மை இயல்பு. குணங்குறியற்றது அது; ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாதது; வேண்டியபோது வேண்டிய உருவத்தைச் சுயமாகத் தானே கொள்ள வல்லது; ஆன்மாக்களின், வாக்காலும் மிக்க மனத்தாலும் உணர அரியது; அரியதாயினும், அன்பால் உணர்வார் உள்ளத்தே அவர் நினைந்த வடிவோடு விரைந்து தோன்றியருளுந்தன்மையது. இவ்வாறு அருமையில் எளியதாய் அருள் புரிதலால், வாக்கு மனதீத கோசரமாய் நின்ற அது எனப்படும்.

அன்பர்கள், தம்முடைய விக்கினங்களைத் தீர்த்து அருள் புரிந்த போது 'வீக்கினேஸ்வரர்' என்ற அருமைத் திருநாமத்தைச் சூட்டினார்கள். தேவர்கள், தங்களுக்கு அசுரர்களால் நேர்ந்த துன்பங்களை நீக்க வழிவகை அறியாது திகைத்துச் சிவனை வேண்டி நின்றார்கள். அவரே தங்களுடைய துன்பத்தை நீக்கியருளியமை கண்டு, தமக்கு மேலொரு தலைவரில்லாத அச்சிவனது நிலை கருதி, அவருக்கு 'விநாயகர்' என்ற அருமைப் பெயரை இட்டனர். துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனத்தின் பொருட்டுச் சிவபெருமான் கொண்டருளிய மூர்த்தமே விநாயக மூர்த்தம். சிவனே விநாயகர் ஆவர்; சிவனுக்கும் விநாயகருக்கும் வேறுபாடுகள் இல்லை. சிவனுக்குரிய ஐந்து திருமுகம், ஐமூன்று திருவிழி, பத்துத் திருக்கரம் நாகாபரணம் ஆதியன விநாயக சிவத்திற்குமுண்டு சச்சிதானந்த சிவத்தின் சித்தாகிய சத்திகாரியமே விநாயக சிவமூர்த்தம்.

## விசுவரூபம்:

'விநாயகரன்றி உலகத்தில் வேறொன்றுமில்லை' என்று கூறுமாறு விநாயகர் எங்குந் தங்கி எல்லா உலகமாயும் நிற்கும் நிலையே விசுவரூபம். (விசுவம் - உலகம்) திருக்கோயிலில், கர்ப்பக்கிருக தூபிகையும், திருக்கோபுரமும் ஒருபுடை ஒப்பான விசுவரூப தரிசனமே. விநாயக சிவனுடைய திருவுருவம் உலகினைக் கடந்து நிற்றலால் விசுவாதிகன் என்றும், அவருடைய திருவுருவிலே உலகம் தோன்றி நின்று ஒடுங்குவதால் விசுவகாரணன் என்றும், அவர் அசைந்த வழி உலகமும் அசையும்படி உள்ளே உலகினுக்கு உயிராய் நின்று இயக்குதலால் விசுவாந்தரியாமி என்றும், உலகத்தை உருவமாகக் கொண்டு நிற்றலால் விசுவரூபி என்றும் அவர் வேதத்துள்ளே கூறப்பட்டனர். சிவஞான சித்தியாரும்,

''உலகினை யிறந்து நின்ற தரனுரு
வென்ப தோரார்
உலகவ னுருவிற் ேறன்றி யொடுங்கிடு
மென்று மோரார்
உலகினுக் குயிரு மாகி யுலகுமாய்
நின்ற தோரார்
உலகினி லொருவ னென்ப ருருவினை
யுணரா ரெல்லாம்''
(சுப. 68)

என்று விளக்கம் தருகின்றது. அண்டமும் புவனம் யாவும் அமரரும் பிறவும் தன்னுருவமாகக் கொண்டு நிற்றலாகிய விசுவரூபத்தில், இருநூற்று இருபத்து நான்கு புவனமுந் திருமேனியாகவும், எண்பத்து நான்கு நூறுயிர யோனி பேதங்களும் உறுப்புக்களாகவும், இச்சா ஞானக் கிரியைகள் உட்கரணமாகவும் அமையும். விசுவரூபங் கொண்டதன் பயன். உயிர்களுக்கு (இருவினையொப்பு, மலபரிபாகமுற) அறிவினை ஆக்குதலேயாம். விசுவரூபத்தின் தொழில், பஞ்சகிருத்திய விரிவே யாகும் விநாயகர் உயிருக்கு உயிராய் நின்று அதிசூக்கும ஐந்தொழில் புரிந்தாலும் (தாம், வேறு, உயிர் வேருகவுமே நிற்பர். இவ்வாறு செய்தல் விநாயகருக்கு ஒரு நாடகம் போலும்.

உலகமே யுருவ மாக யோநிக
ளுறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட்
கரண மாக
அலகிலா வுயிர்கட் கெல்லாம்
அறிவினை ஆக்க ஐந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக
நடிப்ப னுதன்.
(சித்தியார் சுப. 237)

அதிசூக்கும ஐந்தொழிலும் விநாயகர் அனுக்கிரகத்தின் பொருட்டுச் செய்யும் விளையாட்டென்பர். ''ஏற்ற இவை அரனருளின் திருவிளையாட்டாக இயம்புவர்கள்'' என்பது சிவப்பிரகாசம் (18) பாரம் இன்றி ஐந்தொழிலையுஞ் செய்தது கொண்டே அவருக்கு அது விளையாட்டாயிற்று 'காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி' 'ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்' எனவரும் திருவாசகப் பகுதிகளையும் இதனோடு ஒப்பிடலாம்.

சொன்னவித் தொழில்க ளென்ன
காரணந் தோற்ற வென்னின்
முன்னவன் விளையாட் டென்று
மொழிதலு மாமு யிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவு
மருளான் முன்னே
துன்னிய மலங்க ளெல்லாந்
துடைப்பதுஞ் சொல்ல லாமே.
(சித்தி. சுப. 56)

*பஞ்சமுக விநாயகர்:*

இலங்கை வேந்தனை இராவணன், இலங்கையும் தானும் அழியாதிருக்க வரம் பெற விரும்பினன். அதற்காகத் திருக்கைலாசத்திற்குச் சென்று தவம் புரிந்தான். சிவபெருமானும் அவன் தவத்திற்கு இரங்கி, அவனிடம் ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்தார். அதை நிலத்தில் வையாமல் நடந்தே கொண்டு செல்லுமாறு பணித்தருளினர். இதனை அறிந்த தேவர், இராவணனது எண்ணம் நிறைவேருமல் விக்கினஞ் செய்யுமாறு விநாயகரை வேண்டித் துதித்தனர். அவரும் அதற்கு இசைந்தருளினர். இராவணனுக்குச் சல உபாதியை ஏற்படுத்துமாறு முதலில் வருணனை ஏவினர் பின்னர் தானும் பிராமணப் பிரம்மசாரியாய் இராவணன் வரும் வழியில் நின்றார்.

பிரமசாரியைக் கண்டதும் இராவணன் எனக்குச் சல உபாதியாய் இருக்கின்றது, நான் சலம்விட்டுச் சுத்தி செய்து வரும்வரை இவ்விலிங்கத்தை வைத்திரு என்றான், பிரமசாரி பெலவீனமான நான் நெடுநேரம் தாங்கிக் கொண்டிருக்க மாட்டேன்! உன்னை மூன்று முறை கூப்பிடுவேன்; நீ வரச் சுணங்கினல் நிலத்தில் இலிங்கத்தை வைத்து விடுவேன் என்றார். இராவணன், உபாதி பொறுக்க முடியாமையால் அதற்கிசைந்து இலிங்கத்தைக் கொடுத்து விட்டுச் சென்றான் பிரமசாரி சிறிது நேரம் ஆனதும் மும்முறை அவனைக் கூப்பிட்டுவிட்டுச், சிவலிங்கத்தை

நிலத்தில் வைத்தார் வருணனும் இராவணன் வயிற்றை விட்டு விலகினன்.

இராவணன் சுத்தி செய்து வந்து பார்த்தான்; நிலத்தில் இலிங்கத்தை வைத்தற்காகப் பிரமசாரியைக் கோபித்தான் இருபது கைகளையும் ஓங்கிக் குட்டுவதற்கு எத்தனித்தான். அதற்குள் விநாயகர் விசுவரூபம் கொண்டருளினர். சாட்சாத் பரமசிவன் தானே; 'சிவனே விநாயகன், விநாயகனே சிவன்' என்பதை உலகமறிந்து உய்ய, ஐந்து திருமுகங்களை வெளிப்படக்காட்டிப் பஞ்சமுக விநாயகரானர். பஞ்சமுக விநாயகரின் பாரமேசுவர வடிவத்தில் இராவணன், அண்ட சராசரங்கள் அத்தனையும் அடங்கியிருந்தமையை அவனருளால் கண்டான். அவரே பரம்பொருள் என்பதைக் கண்குளிரக் கண்டு மகிழ்ச்சியடைந்தான். திருப்பெரு வடிவ தரிசனத்தால் இராவணன், அகங்காரமும் பகையுணர்வும் நீங்கி, அடிமைத்திறம் பூண்டான்.

*முடிவுரை:*

பிறன் மனைவியைக் கவர்ந்து பெருந்தீமைகளைச் செய்த இராவணன், பஞ்சமுக விநாயக விசுவரூபத்தைத் தரிசித்தமையால் பழியும் பாவமும் நீங்கப் பெற்றான். இராவணனது குல முதல்வனை பிரமதேவருக்கும் விநாயகர் விசுவரூபங் காட்டிய வரலாறு, விநாயக புராணத்தில் காணக்கிடக்கின்றது சூரபன் மனது விசுவரூப தரிசனம் வான்மீகி கச்சியப்பர் ஆகிய இருவராலும் பிறராலும் அன்று தொட்டு இன்று வரை வியந்து பாராட்டப்படுகின்றது. பண்டை நற்தவத்தால் தோன்றிய பாக்கியவான்களுக்கே விசுவரூப தரிசனம் கிடைக்கும். பஞ்சமுக விநாயகரை வழிபடும் பேறுபெற்ற நாமும் ஓரளவு பாக்கியம் செய்துள்ளோம்.

மார்ச்சார சம்பந்தமாக வந்து நமக்கு அருள்பாலிக்கும் பஞ்சமுக விநாயகரைப் பாடிப் பணிய என்ன தவம் செய்தோமோ! விநாயகரது பஞ்சமுக விசுவரூபத்தை நினைந்து, பக்தி கூர் விரதம் பயின்று, நாலாஞ் சத்திநிபாதம் பெறலாம் அப்படிப் பெற்றால் விநாயகரே ஞானசற்குருவாக மானிடச் சட்டை சாத்தி வந்து, ஞானமருளி, அதன் மூலம் வீடுபேற்றையும் தந்தருளுவார். இப்பிறவி நிலைத்திருக்கும் போதே பஞ்சமுக விநாயக விசுவரூபத்தைத் தரிசித்தே பெறும் பேற்றைப் பெற்று உய்வோமாக!

திருச்சிற்றம்பலம்

---

நான் எழுத்தாளனகப் புகழ் பெறுவதற்கு முன்பு என்னிடம் இருந்தது ஒரே ஒரு கோட்டும் பாண்டும்தான் இந்த ஒரே உடையை உடுத்திக் கொண்டு பலர் முன்னே தோன்ற எனக்கு வெட்கமாக இருந்தது அதனல் என் புகலிடமாக நூலகத்தைத் தேர்ந்தெடுத்தேன். அங்கே மற்றவர்கள் உடையை யாரும் உற்றுப்பார்க்க மாட்டார்களல்லவா? இவ்வாறு நூலகத்தில் ஏழு வருடங்களைப் போக்கியதன் பயனக நானும் ஒரு புதிய சிந்தனையாளனக மாறினேன்.

-- பேர்னுட்ஷா

## செல்லையா சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்

ஓடர்கள் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளலாம்.

## செல்லையா சிவபாதலிங்கம்

218 H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Telephone: 23794


புங்குடுதீவு மேற்கு இருபிட்டி
அரியநாயகன் புலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
கும்பாபிஷேக மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்.

# சக்தி ஸ்ரோர்ஸ்

310 A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நதியா ஜுவல்லறி

அழகிற்கு அழகு செய்யும்
அழகிய தங்கப்பவுண்
நகைகளுக்கு



# நதியா ஜுவல்லறி
# Nathiya Jewellery

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான் அருள்
அனைவருக்கும் பாலிப்பதாக
தலைநகரில் தரமான அச்சு வேலைகளுக்கு
நீங்கள்
நாட வேண்டிய இடம்

## NEW GANESAN PRINTERS

**PRINTERS & PUBLISHERS**
22, ABDUL JABBAR MAWATHA,
COLOMBO-12.
Phone: 35422

கொழும்பு - புங்குடுதீவு லொறிப் போக்குவரத்து
சீமேந்து ஓடர்களும் உங்கள் ஏனைய தேவைகளும்
துரித கதியில் நிறைவேற்றப்பட

# S. L. P. TRANSPORT SERVICE

## எஸ். எல். பி. போக்குவரத்து சேவை

உரிமையாளர்: திரு. செ. சி. லோகநாதன்
புங்குடுதீவு - 1

WITH THE BEST COMPLIMENTS

OF

# MUTUAL HOLIDAY TRAVEL

38, 2ND FLOOR,
HOSPITAL STREET,
COLOMBO-1

Telephone: 3 2 8 8 2

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

சகல உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்

T. C.



# திவாகன் கொம்பனி

# THIVAGAN COMPANY

208, நாலாம் குறுக்குத்தெரு,

கொழும்பு-11

Phone: 28556




ஐங்கரன் தாள்

அனுதினமும் தொழுவோம்

# PARIS LODGE

## 142, MALIBAN STREET,
## COLOMBO-11

*வெளிநாட்டுப் பயணமா? தங்குமிட வசதியா?*
*வெளிநாட்டு உள்நாட்டு தொலைபேசி அழைப்புகளா?*
*வாருங்கள் வரவேற்கின்றோம்,*

# பரீஸ் லொட்ஜ்

142, மலிபன் வீதி,

கொழும்பு - 11

With best Compliments

from

# Asian Travel Services

63 – I/7, CHATHAM STREET,

COLOMBO-1

Telephone: 24745

*WITH THE BEST COMPLIMENTS*

*OF*

# WOODLANDS COMPANY

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

**192, FOURTH CROSS STREET,**

COLOMBO-11

Phone: 27451

---

*BEST WISHES*

*FROM*

# WOODLANDS HOTEL

192, FOURTH CROSS STREET

COLOMBO-11


Telephone: **27451**



முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன்




வைரவர்



தண்டேசுரர்

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"



தேயிலை, அங்கர் பால்மா, ஆகியவற்றின்
ஏகவிநியோகஸ்தர்களும் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்
விற்பனையாளர்களும் மற்றும் உணவுப்பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் நியாயவிலையில் பெற்றுக்கொள்ள

தலைநகரில் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# வெங்கா றேடர்ஸ்

## 156B, மலிபன் வீதி,

## கொழும்பு-11

தொலைபேசி: 34714

குறிப்பு: நண்பர்களுக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்

க. அரியநாயகம்

புங்குடுதீவு-6

'விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனே போற்றி''



தலைநகரில் நவநாகரீக ஜவுளி தினுசுகட்கும் ஆடைகட்கும்
மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும்
நாடவேண்டிய ஸ்தாபனம்

## 'ரெக்ஸாகோ'

# TEXACO

48/4, இரண்டாம் குறுக்குத்தெரு,
கொழும்பு - 11

---

*WITH THE BEST COMPLIMENTS*
*OF*

**EXPORTERS & IMPORTERS**

# ARI TRADING AGENCY

*122, 2/2, PRINCE STREET,*
COLOMBO-11
*PHONE: 26453*

*With the best Compliments*

*of*

V

SERVICE WITH A PERSONAL TOUCH

# Travel Link Associates

18 - 1/2, MUDALIGE MAWATTE (BAILLIE STREET),

**COLOMBO-I**

*SRI LANKA.*

Phone: **545657**

உ



"கைத்தல நிறைகனி அப்பமோடவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி"

## தலைநகரில் தன்னிகரில்லா அசைவ உணவிற்கு

அனைவரும் நாடும் ஒரே இடம்

# HOTEL DE JAFFNA

**No. 6, Sri Sumanatissa Mawatta,**
**COLOMBO-13.**

உங்களை தங்க விக்கிரமாக ஜொலிக்க வைக்கும்
22 கரட் தங்க நகைகள்
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

()
()
()
()

# சோதி நகை மாளிகை

70 (9), கன்னாதிட்டி றோட்,

யாழ்ப்பாணம்.


நங்கையர் விரும்பும்
நவீன தங்கப் பவுண் நகைகளுக்கு
சிறந்த இடம்

V

# ந. புனிதவதி அன் சன்ஸ்

70 C, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.

ஓ மென்னும் எழுத்திலுள்ள
ஒளியதாய் விளங்குகின்ற
வாமனே கருணை நல்கும்
வள்ளலே நமச்சிவாய



மாநகரில்
மங்கையர் மனங்கவரும் டிசைன்களில்
மாற்றுக்குறையாத தங்கத்தில்
அற்புதக் கலையுள்ள அழகிய நகைகளை
நம்பிக்கை நயத்துடன் பெற்றிட
நாடவேண்டிய சிறந்த இடம்

# HAPPY JEWELLARY

**118, KASTURIYAR ROAD,**
**JAFFNA.**

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து


# நா. க. மதியாபரணம்

82/7, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

புங்குடுதீவு மேற்கில் உறையும் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகனே
சீர்பெற்றுச் சிறப்புடன் வாழச் சித்தி தருவாயே

## லிங்கம் கூல் பார் & கோப்பி பார்

52, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்தி)
யாழ்ப்பாணம்.

---

*பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்*

எங்களிடம்
ரொபி, இனிப்பு, பிஸ்கட் வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

## பிரியா றேடர்ஸ்

58, கே. கே. எஸ். றேட்,
(சத்திரச் சந்தி)
யாழ்ப்பாணம்.

மேற்கூறிய மாவட்டங்களை உற்று நோக்கும்போது பெரும்பாலானவை வரண்டவலயப் பிரதேசத்திலேதான் காணப்படுகின்றன. இவ்வலயம் தான் கிறிஸ்தாப்தத்திற்கு முன்னர் குடியேற்றம் நடைபெற்ற இடமாக விளங்கியதோடு அரச இருக்கைகளும் காணப்பட்ட இடமுமாகும். இக்கல்வெட்டுக்களில் பிராமண குலங்கள் (பமண) என அழைக்கப்பட்டாலும் இவர்கள் பல் வகைக் கோத்திரங்களைச் சார்ந்தவர்களாகவும் விளங்கியமை இவர்கள் பெயரால் புலப்படுகின்றது. இத்தகைய கோத்திரங்கள் பல தமிழகத்திலும் சமகாலத்திற் காணப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. (Kuppuswami, T. V. 1978) உதாரணமாகப் புறநானூற்றில் காணப்படும் கோத்தமனர், மார்க்கண்டேயனர், வான்மீகியார், நெடும்பரதாயனர், பாலை கௌத்தமனர் போன்ற பெயர்கள் கோத்திரங்களின் பெயர்களே. இத்தகைய கோத்திரங்கள் ஈழத்திலும் காணப்படுவது வேதநெறிக் கலாச்சாரத்தில் ஊன்றித் திளைத்த பிராமண குலங்கள் தமிழகத்தைப்போல் ஈழத்தில் காணப்பட்டதை உறுதி செய்கிறது.

அநுராதபுர மாவட்டத்திலுள்ள கண்டகல (Paranavitana, S 1970: 124) என்ற இடத்திற் காணப்படும் கல்வெட்டில் 'பமண சுக' குறிக்கப்பட்டுள்ளான். இது பிராமணனாகிய 'சுங்க' என்ற சமஸ்கிருத பதத்தின் பிராகிரித வடிவமே. மௌரிய வம்சம் வீழ்ச்சி அடைந்த பின்னர் எழுச்சி பெற்ற வம்சமாகச் சுங்கர்கள் குறிக்கப்படுகின்றனர். இது வெறும் வம்சப்பெயர் மட்டுமன்றி ஒரு பிராமணக் கோத்திரத்தின் பெயர் கூட, சுங்கவம்சத்தவரும் பிராமண குலத்தவரே, இதேபோன்று யான்கல குகைக்கல்வெட்டில் (Paranavitana S. 1970: 205) பிராமணனை கோசிகனும் அவனது மகன் விசித்தசேனனும் குறிக்கப்பட்டுள்ளனர். இங்கே வரும் கோசிகன் என்றபதம் புகழ் பூத்த பிராமண ரிஷிகளான விஸ்வாமித்திரர் போன்ரோர் உதித்த குலமாகிய 'கௌசிக' குலத்தையே குறித்து நிற்கின்றது எனலாம்.

அப்பாறை மாவட்டத்திலுள்ள கோன்கல Paranavitana, S 1970: 545 என்ற இடத்திற் காணப்படும் குகைக் கல்வெட்டில் 'பமண அதிமதக' என்ற குறிப்புண்டு. இது உண்மையிலே ஐத்திரேய குலத்தினைச் சேர்ந்த பிராமணர் பற்றிய குறிப்பாகும். இவர் தாய் வழியில் இக்குலத்தினைச் சேர்ந்தவராவார். இக்குலத்திலும் புகழ் பூத்த பிராமண ரிஷிகள் தோன்றியுள்ளனர். அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள சித்துல் பவுவ என்ற இடத்திலுள்ள குகைக் கல்வெட்டில் [பமண வச] என்ற குறிப்புண்டு. (Paranavitana, S. 1970: 601) இது வற்சய கோத்திரத்தினைச் சேர்ந்த பிராமணர் பற்றிய குறிப்பாகும். இதே இடத்திலே காணப்படும் இன்னோர் கல்வெட்டில் 'பமண மருகுடகொதம' என்ற வசனம் உண்டு. (Paranavitana, S. 1970: 656) இது கௌதம கோத்திரத்தில் உதித்த பிராமணர் பற்றிய குறிப்பாகும். இதே போல் குருநாகல் மாவட்டத்திலுள்ள சஸ்ஸேருவ என்ற இடத்தில் உள்ள கல்வெட்டில் 'பிராமணனாகிய வசகனி' குறிப்பிடப்பட்டுள்ளான். இது வார்சகன்ய கோத்திரத்தினைச் சேர்ந்த பிராமணன் பற்றிய குறிப்பாகும். இவனின் மகனை சோமதேவவும் இதில் குறிக்கப்படுகிறுன். 'சோமதேவ' என்ற பெயர் கூடப் பொதுவாக பிராமணர்கள் சூடும் பெயர்களில் ஒன்றாகும். இதேபோன்று குருநாகல் மாவட்டத்தில் உள்ள டியபத்த விகாரையில் உள்ள கல்வெட்டில் காணப்படும் 'பமண மேகலி' என்ற பதத்தில் வரும் 'மேகலி' என்ற பெயரும் கூடப் பிராமணர்கள் பொதுவாகச் சூடும் பெயரே ஆகும். (Paranavitana, S. 1970 : 1045)

மேற்படி கோத்திரங்கள் பற்றி வரும் குறிப்புகளைத் தவிர பிராமணர் என்ற அடைமொழி இன்றியும் பிராமிக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் பிராமண கோத்திரங்கள் காணப்படுகின்றன எனப் பரணவித்தான கூறுவது ஈண்டு கவனிக்கத்தக்கது. Paranavitana, S 1970 lxix) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள சித்துல் பவுவ என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டில் 'ஆசாரிய பராசரிச லேன' என வரும் குறிப்பு அவதானிக்கத்தக்கது. இதன் பொருள் ஆசிரியராகிய

பராசர குலத்தோனது குகை என்பதாகும். இதில் குறிக்கப்படும் பராசர கோத்திரம் வியாசரின் தந்தையின் பெயரைத் தாங்கிய கோத்திரமாகும். இதே வாக்கியத்தில் 'ஆசாரிய' என்ற பதமும் காணப்படுவதால் பொதுவாக இப்பதம் பிராமண ஆசிரியர் களைக் குறித்து நின்றதால் இக்கல்வெட்டும் பராசர கோத்திரப் பிராமணரையே குறித்தது எனப் பரணவித்தான ஊகிப்பது ஏற்புடைத்தான கருத்தாக அமைகிறது. இதே போன்று குருநாகல் மாவட்டத்தில் உள்ள 'கடுறுவேவ' என்ற இடத்தில் உள்ள 'பருமக வகிதி' என்ற வசனம் காணப்படுகிறது. (Paranavitana, S. 1970 : 1202) வகிதி தான் பல பிரபுக்கள் தோன்றிய வமிசத்தினை உருவாக்கியவராகவும் இக்கல்வெட்டிலிருந்து தெரியவருகிறது. பரணவித்தான வகிதி என்பது வடமொழியில் உள்ள 'வசிட்ட' என்ற கோத்திரத்தின் பிராகிருத வடிவமே என இனங்கண்டு விஸ்வாமித்திரரின் எதிரியாகிய வசிட்ட கோத்திரத்தில் உதித்தவரை இது குறிக்கும் எனவும் கூறியுள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள பரமாகண்ட என்ற குகைக் கல்வெட்டில் காணப்படும் 'அமெதே வகிதி மதக லேன' அதாவது 'மந்திரியாகிய வகிதி மதகவின் குகை' எனப் பொருள்படும் வசனத்தைக் கொண்டு இந்த மந்திரியானவன் தாய் வழியாக வசிட்ட கோத்திரத்தைச் சேர்ந்த (பிராமணர்) எனவும் ஊகித்துள்ளார். அநுராதபுர மாவட்டத்தில் உள்ள மிகுந்தலையில் 'பருகம பொதி மசக புத உதய ச சோம தேவக ச அகதமகத ககஸ' என வரும் குறிப்பு (Paranavitana, S. 1970 : 24) பருமகனை பொதிமசவின் பிள்ளைகளான உதி, சோமதேவ ஆகியோரின் குகை சங்கத்திற்குத் தானமாகக் கொடுக்கப்பட்டதென்ற பொருளைத்தருகிறது. பரணவித்தான இதில் குறிப்பிடப்படும் 'பொதிமச' பிராமண கோத்திரமாகிய 'பௌதிமாச' கோத்திரத்தையே குறிக்கிறது என விளக்கியுள்ளார். இவனின் பிள்ளைகளாக 'உதி' 'சோமதேவ' குறிக்கப்படுகின்றனர். பிராமணர்கள் பற்றி நேரடியாகக் குறிப்பிடப்படும் பிராமிக் கல்வெட்டுக்களில் 'உதி' 'சோமதேவ' ஆகியோர் பிராமணர்களாகக் குறிக்கப்படுவதால் இக்கல்வெட்டும் பிராமணருடையதே என்று எண்ணுவதில் தவறில்லை எனலாம்.

மேற்கூறியவாறே அநுராதபுர மாவட்டத்தில் உள்ள ராடாகம என்ற இடத்தில் உள்ள குகைக் கல்வெட்டில் (Paranavitana S. 1970 : 99) 'ககபதி அடக' என்ற குறிப்பு வருகிறது. இதன் பொருள் 'இல்வாழ்வானை (செல்வந்தப் பிரபுவாகிய) அடக' என்பதாகும். அடக என்பதன் பொருள் பற்றி ஆராய்ந்த பரணவித்தான இது வேத மந்திரங்கள் பலவற்றைத் தொகுத்த 'அஷ்டக' என்ற ரிஷியைக் குறிக்கலாமென்று கூறுவது பொருத்தமுடைய கருத்தாக அமைகிறது.

பிராமண குலத்தவர் அதுவும் வடமொழி வேத நெறி வந்தோர் பலர் கடைப்பிடித்த சமய நெறியினை எடுத்துக்காட்டும் விதமாக பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் வேதநெறிக் கடவுளரின் பெயரைச் சூடியிருந்த மக்கள் பெயர்கள் ஆகியனவும் எடுத்துக் காட்டுகின்றன. வேதநெறிக் கடவுளர்களில் மக்கள் ஈடுபாடு கொண்டிருந்ததை பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் அக்னி, ஆர்யமன், பாக, தகதிறு (அக்னி), இந்திர, மகேந்திர, மித்ர, நாசாத்ய, பித்றுஸ், புருச, சோம, சூர்ய, வருண, வாசுஸ், விஸ்வதேவ, விஷ்ணு, யாக (வேள்வி) ஆகியனவற்றின் பொருளைத் தரும் பெயர்களான அகி, அகிதத, அகிபுதி, அயிபர, அயிமர, பகதேவ, பகுதிஸ, பக, துகதர, துஉறிதய, இட, இடபுதி, இடகுத, இடறகித, மகிட, மித, மிததேவ, மிதகுத, மிதபல, மிதசேன, மிதிய, நசத, பிதமகா ராஜ, புருஷதத், சோம, சோமதத்த சோம தேவ, சோமலி, சுரி, சுரிகுத, வருணதத, வருணகுத, வசு, வசுதத, விணு, யகதத போன்ற பெயர்கள் விளங்குகின்றன; இப்பெயர்களில் பல 'கொடுக்கப்பட்ட' எனப் பொருள்படும் தத' பாதுகாக்கப்படுபவன் எனப் பொருள் தரும் 'புதி' 'குத' 'ரக்கித' என்ற அடைமொழிகள் பெற்றுக் காணப்படுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

பௌராணிகக் கடவுளர்களான பலதேவ, பிரமா, கோபால, கால (யமன்) காளி, கிருஷ்ண, குமார (ஸ்கந்த), குபேர, லஷ்மி, மகாசேன, நாராயண, ராம, ரேவ, சமுத்ர, சர்வரி, சிவ, சாகர, சிறீ, சமன (யமன்) சுவாமி (மகாசேன) வைஸ்ராவன ஆகியோர் இக்கால மக்களால் வழிபடப் பட்டனர் என்பதை பலகுதஃ பம, பமதத, பமலி, கோபால, சகர, கமுட, கட, (கால), கடக, கடலி, கடியா, கண, கணதத, கணதாசிகா, கணகுத. கணதிஸ, குபீர, குமார, குமாரதத்த, குமாரதிக, லசி' மகா சமுட, மகாசிவ, மகாசேன. நகுலி, நாரா யகுத, ராமஜாத, ராமதத, ராம, ராசு மிலிய, ரேவ, சாகர, சமித்த. சமுத, சமுத குத, சவோ. சிறிகுத, சிறிபலி, சிவ, சிவ புதி, சிவகுத, சிவல, சிவனுபதி, சிவரக்கித, சுகட, சுரிட, சுமணதேவி, சுவிசக, விசக, விகக வெசமன போன்ற பெயர்கள் எடுத் துக்காட்டுகின்றன. (Paranavitana, S. 1970 : cxxiii).

மேற்கூறிய செய்திகளை நோக்கும்போது ஈழத்தில் பௌத்தம் கால் கொள்ள முன்னர் மக்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கைகள் இந்துமத நம்பிக்கைகளே என்பதும் இவற் றுள் வேத நெறிவழிவந்த நம்பிக்கைகளும் கணிசமாக இருந்ததும் புலனாகின்றது, இந் நம்பிக்கைகளின் கிரிகை நெறியாளர்களா கப் பிராமண குலத்தவர் அன்று விளங்கி னர். இந்நம்பிக்கையிலீடுபட்டவர்கள் கால கதியில் பௌத்தத்தைத் தழுவினாலும் தமது பழைய நம்பிக்கைகளின் எச்ச சொச்சமாக மேற்கூறி பெயர்களைச் சூடியிருந்தாலும் காலக்கிரமத்தில் இப் பெயர்கள் கூட புதிய மதமாகிய பௌத்தத்தின் செல்வாக்கால் மறைந்தன எனலாம். (சிற்றம்பலம் சி. சு 1976)

மேற்கூறிய நம்பிக்கைகளில் பிராமண குலத்தவர் ஈடுபட்டிருந்தாலும் பலர் பௌத் தர்களாகவும் மாறினர். இதற்கு உரைக் கல்லாக அமைவது தான் அநுராதபுர மாவட்டத்திலுள்ள மகா ஆலகமுவ என்ற குகைச் சாசனமாகும். (Paranavitana, S. 1970 228 cxxiii) இச்சாசனத்தில் குறிக் கப்படும் 'பமனதிஸ' என்ற பெயருடன் அடைமொழியாக பிக்குமாரைக் குறிக்கும் 'படத' என்ற பதம் காணப்படுவதைச் சுட்டிக் காட்டி இப்பிராமணன் பௌத்த மதகுருவாக மாறியதை இது எடுத்துக் காட்டுகின்றது. எனப் பரணவித்தானா கூறு கிறார். இல்க்கியச் சான்றுகளும் பிராமணர் பிக்கு சாசனத்தில் சேர்ந்ததை எடுத்துக் காட்டுவதால் இதே போல் பலர் மதம் மாறி னர் எனவும் கொள்ளலாம்.

குகைச் சாசனங்களில் வேதநெறிக் கிரி கைகளில் மட்டுமன்றிப் பல்வகைத் தொழில் களில் ஈடுபட்டவர்களாகவும் பிராமணர் குறிக்கப்படுகின்றனர். இதற்கான இலக் கியச் சான்றுகளாக ஈழத்துப் பாளி நூல் கள் மட்டுமன்றிச் சங்க இலக்கியங்களும் அமைகின்றன. கண்டேகமகண்டவிலுள்ள குகைச் சாசனம் 'பிராமணரான உதி' படி காரவாக (நிதியாளராக) தொழில் புரிந் ததைக் கூறுகிறது. அரசனின் அல்லது சிற்றரசுகளின் கீழ் இவன் இத்தகைய பத வியை வகித்திருக்கலாம். கண்டே- கலவில் உள்ள குகைச் சாசனம் பிராமணரான குத வில்லுகளை உற்பத்தி செய்யும் தொழிலிலீடு பட்டதைக் குறிக்க, பிச்சாண்டியாவிலுள்ள சாசனம் 'கொபுதி' என்ற பிராமணன் தேவ நம்பியதீசனின் 'வைத்தியனாகவும்' 'ஆசிரிய ராகவும்' விளங்கியதைக் கூறுகிறது, எனி லும் பெருமளவுக்கு ஆசிரியத் தொழிலும் பிராமண குலத்தாரால் மேற்கொள்ளப்பட் டாலும் கூட வைத்தியம், சோதிடம் ஆகிய துறைகளில் விற்பன்னர்களாக இவர்கள் இருந்தனர் எனலாம். வடமொழியில் அரசி யல் முறைமை பற்றிய நூல்கள் மட்டுமன்றி வைத்தியம், சோதிடம் ஆகிய நூல்களும் காணப்பட்டதால் இதிற் பாண்டித்தியம் பெற்ற பிராமணர் இத்துறைகளில் முதன்மை பெற்று விளங்கினர் எனலாம். வடமொழி மட்டுமன்றிப் பிறமொழிகளிலும் இவர்கள் தேர்ச்சி பெற்றிருந்ததை பாளி நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. சங்கப் புலவர் களில் பத்து சதவீதத்திற்கு குறையாத புலவர்களாகப் பிராமண குலத்தவர் விளங்கி யதை நோக்கும் போது வடமொழி வல்லு னர்களாக இவர்கள் தமிழகம், ஈழம் போன்ற

பிராந்தியங்களுக்குக் கால் வைத்தாலும் கூட நாளடைவில் சுதேச மொழிகளான தமிழ், பாளி போன்றனவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர் எனலாம். இக் கல்வெட்டுக்களில் காணப்படும் ஆசாரிய, ஆசிரிய போன்ற பதங்கள் பல்வகை துறைகளில் தேர்ச்சி பெற்ற பல்வகை தொழில்களைக் கற்பிப்போரைக் குறித்தாலும் கூட, பெருமளவுக்கு கற்றல், கற்பித்தல் போன்ற தொழில்களிலீடுபட்ட பிராமண குலத்தவரையே இவை குறித்து நின்றன எனலாம். நாளடைவில் பௌத்த பிக்குமாரும் இத்தகைய தொழிலில் ஈடுபட்டதால் இவர்களின் முக்கியத்துவம் குறைந்தது எனலாம்.

நாட்டின் நிருவாகத்திற் கூட இவர்கள் கணிசமான பங்கினை வகித்ததைப் பிராமிக் குகை சாசனங்கள் எடுத்துக் காட்டுகின்றன, எல்லாமாகக் கிடைக்கும் 22 குகைச்சாசனங்களில் 'பருமக' என்ற அடைமொழியுடன் விளிக்கப்படும் பிராமணரைக் குறிக்கும் சாசனங்கள் 5 காணப்படுகின்றன. ஏறக்குறைய இச் சாசனங்களில் காற்பகுதியில் இப்பதம் காணப்படுகிறது எனலாம். பருமக பற்றி ஆராய்ந்த அறிஞர் இது வடமொழிச் சொல்லான 'பிரமுக' வழி வந்த சொல் என எடுத்துக் காட்டினாலும் கூட, மொழியியல் ரீதியில் நோக்கும்போது இச்சொல் பரு + மகன் அல்லது பெரு + மகன் அல்லது பரு + மக என்ற திராவிடச் சொல்லின் வழிவந்தது என்பது புலனாகிறது (Sitrampalam S. K. 1986,87) சங்க இலக்கியங்களும் பெருமகன்/பருமகன் பற்றிக் குறிப்பிட்டு இப்பட்டப் பெயர்கள் உள்ளூர் நிருவாகத்தில் முதுகெலும்பாக விளங்கிய பிரபுத்துவக் குழுவினர் சூடியிருந்த பட்டப் பெயர் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. இதனால் பிராமண குலத்தவர் இப்பெயரைச் சூடியிருந்ததை நோக்கும்போது உள்ளூர் நிருவாகத்தில் அவர்களும் பங்கு கொண்டிருந்ததை இது எடுத்துக் காட்டுகின்றது எனலாம். பொலநறுவை மாவட்டத்திலுள்ள கண்டேகமதண்ட என்ற இடத்திலுள்ள குகைச் சாசனத்தில் பருமகன் உதியின் மகன் பருமகன் மித நிதியாளராக விளங்கியது குறிக்கப்படுகிறது. கண்டி மாவட்டத்திலுள்ள மொலகொட என்ற இடத்திலுள்ள குகைச் சாசனம் 'பருமக சுரி' யின் மகனாகிய பிராமண ததக பற்றிக் குறிப்பிடுகிறது. மாத்தளை மாவட்டத்திலுள்ள தம்புல்லையிலுள்ள குகைச் சாசனம் 'பருமகன் பமண திஸ' பற்றிக் குறிக்கிறது. குருநாகல் மாவட்டத்திலுள்ள தியபத்த விகாரையிலுள்ள குகைச் சாசனத்தில் மூன்று தலைமுறையினர் குறிக்கப்படுகின்றனர். முதல் தலைமுறையைச் சேர்ந்தவர் பிராமணராகிய மெகலி எனக் குறிப்பிடப்பட்ட இவரது மகன் பருமகன் மஜ்ஜிம எனக் கூறப்பட்டுள்ளான் இவனின் மகன் தத அடுத்த தலைமுறையாகும். இதிலே பிராமணரான மகலி பருமக என்ற பட்டத்தினைச் சூடாதிருக்க இவனின் மகனான மஜ்ஜிம இப்பட்டத்தைச் சூடியது தெரிகிறது. மஜ்ஜிமவின் மகன் தத பருமகன் பட்டத்தினைச் சூடவில்லை. இதேபோல் கண்டல என்ற இடத்திலுள்ள குகைச் சாசனம் பிராமணனை பருமகனைக் குறிக்க, இவனின் மகன் வெறுமனே பருமகன் பட்டமின்றி 'குத' என விளிக்கப்படுகின்றான். இவனே வில்லுகளை உற்பத்தி செய்பவனுமாவான் இதனால் இவை சில சமயம் பிராமண குலத்தவர் பரம்பரையாக நிருவாகத்தில் ஈடுபட்டமையையும், சில சமயம் பரம்பரையில் ஒரு காலகட்டத்தில் தான் இப்பதவியை இவர்கள் வகித்ததையும் தெளிவாகின்றன எனலாம். பொதுவாகவே பருமகன் என்ற பட்டம் சில சமயம் பரம்பரை பரம்பரையாகச் சூடிய பட்டமாகவும். சில சமயம் அவ்வாறின்றியும் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுவதும் ஈண்டு நோக்கற்பாலது.

¡பருமகன்¡ என்ற பட்டத்தினையுடையோர் அரசனிடம் நெருங்கி உறவாடியவர்களாக விளங்கியதையும் பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. சில சமயம் மணத் தொடர்புகள் வைத்திருந்ததற்கும் ஆதாரமுள. பம்பரகலவிலுள்ள குகைச் சாசனத்தில் பமண கொஜரவின் மகள் பொசனி ராஜாவின் மனைவியாகக் குறிக்கப்படுகிறாள். (Paranavitana, S. 1970: 814) இச்சான்று ராஜா எனப்பட்ட சிற்றரசர்களுடன் பிராமணர் மணத் தொடர்பு கொண்

## MAHAM GROUP

Sole Distributors
SCAN IMPORTS LTD.
Exporters, Importers
Distributors
Commission Agents and Stockists

# MAHAM GROUP

336/49 50, K. K. S. ROAD, JAFFNA.
T.P. 24175 - 24211

---

கோவில்களுக்குத் தேவையான பட்டுக்குடைகள், பூசை மணி, பெரியமணி, கிடாரம், திருவாசி குத்துவிளக்கு, ஸ்தூபி கும்பத்துக்குரிய செம்பு வகைகள், சருவம், குடம், தீபம், தூபம், எவர்சில்வர், பித்தளை, செம்பு, அலுமீனியப் பொருட்கள், விளையாட்டுப் பரிசுக் கிண்ணங்கள் கேடயங்கள் முதலியன .எம்மிடம் மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

எலெக்ரோ பிளேட்டிங் செய்து கொடுக்கப்படும்

# ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ்

297, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் மகாகும்பாபிஷேக உற்சவத்தை முன்னிட்டு எமது சிரந்தாழ்ந்த, கை கூப்புதல்களைத் தெரிவித்து எல்லாம் வல்ல இறைவனின் ஆசிவேண்டி நிற்கின்றோம்.

## ஸ்ரீ உமா பான்சி பிளேஸ்

*எம்மிடம் சூட்கேஸ் வகைகள், ஹேண்ட் பாக், ஸ்கூல் பாக்,*
*ட்ரவலிங் பாக், லேஸ் வகைகள், பென்ஸி பட்டன்,*
*ரோல்ட் கோல்ட் நகைகள், அன்பளிப்புப் பொருட்கள்*
*மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*

# ஸ்ரீ உமா பான்சி பிளேஸ்

30, நவீன சந்தை, யாழ்ப்பாணம்:

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர மின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

சுவையான சைவ உணவுவகைகளுக்கு

## கிறீன்லண்ஸ் ஹோட்டல்

35, கே, கே, எஸ், வீதி
சுண்ணுகம்

உரிமையாளர்:- திரு. த. மகாதேவன்

---

## றஸாஞ ஜுவல்லர்ஸ்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

## றஸாஞ ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை உற்பத்தியாளர்கள்
355, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

---

வேண்டுவார்க்கு வேண்டுவன வாரிவழங்கும்
வீரகத்தி விநாயகர் திருத்தாள் போற்றுவோம்.

## ஜெயரூபன் ஸ்ரோர்ஸ்

15, குருநகர் நவீன சந்தை,
பாங்சால் வீதி
யாழ்ப்பாணம்.

விநாயகப் பெருமானுடைய கிருபை
அனைவருக்கும் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்.

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற சகல
பட்டுப் புடவைகளுக்கும் ஒரு
கைராசியான நிறுவனம்

# கணேசன் ஸ்ரோர்ஸ்

63, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு:

## உதயம்ஸ் ரெக்ஸ்ரைல்

174, (86) கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகனின் கடைக்கண் பார்வை
அனைவருக்கும் கிட்டுவதாக

## கஜமுக ஸ்ரோர்ஸ்

இல. 75, மேற்கு மார்க்கட்,
யாழ்ப்பாணம்.

அரியநாயகன்புல ஆனைமுகத்தான் அருள்
அகில மெங்கும் பரவ வேண்டுகின்றேம்.


**தரமான தங்க நகைகளுக்கு**

**நாடுங்கள்**

# விநாயகா ஜுவல்லறி

**381, கே. கே. எஸ். வீதி,**

**யாழ்ப்பாணம்.**


---

நற்குஞ்சரக் கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.


**சுவையான சிற்றுண்டி**

**வகைகளுக்கு**

# VISHNU VIHAR

**163, POWER HOUSE ROAD,**

**JAFFNA.**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன் தன்னை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.


நவ நாகரீக நகைகளுக்கு

# செந்தில் ஆண்டவன்

## நகை வியாபாரம்

85, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகள்
குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

நவீன வேலைப்பாடுள்ள தங்க, வைர நகைகள்
விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் கிடைக்குமிடம்

ஜெயகிருஷ்ணா ஜுவல்லர்ஸ்

76, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

அடியார்களுக்கு
புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன்புலம்
அருள் மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர்அருள் பாலிக்க வேண்டும்.

சுந்தரம் பிறதர்ஸ்

கோயில் அபிஷேகதிரவியங்கள் சித்த ஆயுர்வேத
மருந்துகள் விற்பனையாளர்கள்

175, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

உள்ள மெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பெனுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவிளைப் பசுபோதக் கவள மிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ள மதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்


சில்வர் பாத்திரங்கள், புடவை வகைகளை, ஆடம்பர சாமான்களை
அனைவரையும் அழைக்கிறார்கள் மாநகரில் மலிவுவிலையில்
பெற்றுக்கொள்ள

# கமலேஸ்வரி களஞ்சியம்

119/2 கே, கே, எஸ், வீதி
யாழ்ப்பாணம்.

---

வினைதீர்க்கும் வீரகத்தி நாயகனை வேண்டிப்பணிகிறோம்.
பலசரக்கு சாமான்கள் சைக்கில் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்

# சிவசக்தி ஸ்ரோர்ஸ்

47, 4-ம் குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

---

அரியநாயகன் புலத்தில் வேப்பமர நிழலில் வீற்றிருந்து
அருள் வழங்கும் வேழமுகத்தானே போற்றி! போற்றி!

# தர்சினி ஸ்ரோர்ஸ்

49, 4 ம் குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

மாற்றுக் குறையாத தங்கத்தில்
மனதைக் கவரும் வேலைப்பாடுகளுடன்
மங்கையர் விரும்பும் டிசைன்களில்
அழகிய நகைகளை செய்து தருவதில்
நற்பெயர் பெற்ற ஒரே ஒரு ஸ்தாபனம்

உதயா ஜுவல்லர்ஸ்

நீங்கள் அனைவரும் நம்பிக்கையோடு
யாழ் நகரில்
நாடவேண்டிய இடம்

# உதயா ஜுவல்லர்ஸ்

188, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம்

தரமான அச்சு வேலைகளுக்கும் மற்றும்
பொலித்தீன் கலண்டர், புத்தகம் கட்டுதல் அனைத்தும்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம்
222 (76) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை :
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

---

அழகிற்கு அழகு செய்யும்
அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு

()
()
()
()

சோபனா ஜுவல்லறி
116 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எப்பொழுதும் நீங்கள் விரும்பும்
தங்க வைர நகைகளை திருப்தியுடன் பெறுவதற்கு
உகந்த ஸ்தாபனம்

# ராணி ஜுவல்லர்ஸ்

## 63, கன்னாதிட்டி (R. G. பில்டிங்),
## யாழ்ப்பாணம்.

Telephone: 23544

---

## ஜெற் மார்க் கற்பூரம்

**சுத்தமான விளைவு சூடத்தில் தயாரிக்கப்பட்டது**

*தயாரிப்பாளர்கள்:-* **பெ. பரமநாதன்**

# ஜெற் இன்டஸ்றீஸ்

**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

## திலகா ஜுவல்லர்ஸ்

240, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Telephone: 23719

---

எங்களிடம்

இனிப்பு கச்சான் அலுவா, எள்ளு உருண்டை, எள்ளு அலுவா, பால் ரொபி, தேங்காய்ப்பூ ரொபி, இறுங்குப் பொரி முதலியன தொகையாகவும். சில்லறையாகவும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

## இரவீந்திரா இன்டஸ்ரீட்

15, கைலாச பிள்ளையார் கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

---

"வீரகத்தி விநாயகனே போற்றி"

வாழ்த்துகிறோம்

## க. மு. மாசிலாமணி

26, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

---

சன்பிறுன்ட் ரொபிகள் இனிப்புக்கள்
தரமானவை சுவையானவை இன்றே வாங்கிச் சுவையுங்கள்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்

## அளவை கொன்பக்ஷனறி வேக்ஸ்

அளவெட்டி

ஐந்து கரத்தானே பிள்ளையாரே அறுமுகனுக் கண்ணனாரே பிள்ளையாரே
பிஞ்சுமுகத்தோனே பிள்ளையாரே பெருமைகளைத் தந்திடுவாய் பிள்ளையாரே


எங்களிடம்

கச்சான் அலுவா, கச்சான் பருப்பு, கடலை, கடலைப் பருப்பு,
எள்ளு அலுவா, எள்ளு உருண்டை, பீடா வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

# இந்திரன் இன்டஸ்ரீட்

310 A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வளர்ச்சி - ஓர் நோக்கு

திரு ந. சண்முகநாதன் B.Sc

இந்துமாக்கடலில் ஓர் எழில் முத்தாம் இலங்கைத் தீவின் வடபால் செந்தமிழும் சைவ நெறியும் சிறந்து விளங்கப் பெறும் யாழ்ப்பாண மாவட்டத்தில் சப்ததீவு களெனப்படும் ஏழுதீவுகளுள் வள்ளுவன் வகுத்த விருந்தோம்பலுக்கு இலக்கணமாய் வாழ்வோர் நிறைந்திருக்கும் ஊராம் புங்குடுதீவில் நித்தியபூசை நடைபெற்றுவரும் 15 கோயில்களும் பல சிறு வைரவர் கோயில்களும் ஐயனர் கோயில்களும் கன்னிமார் கோயில்களும் காணப்படுகின்றன. இதில் எட்டு ஆலயங்களில் இருந்து விநாயகப்பெருமான் அடியவர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றார். இதில் ஒன்றே புங்குடுதீவுமேற்கு அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயமாகும்.

எம் மூதாதையர் எமக்கென தேடி வைத்த கோயில்கள் பெருமைக்குரிய செல்வங்களாக போற்றப்பட வேண்டியதாகும் அவற்றை நாம் பேணிப்பாதுகாத்தல் முக்கியமானதொன்ருகும். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாக்குகளே எம் மூதாதையர் அக்காலத்திலே இறை வணக்கத்தில் எவ்வளவு திடவைராக்கிய நம்பிக்கை வைத்து வாழ்ந்தார்கள் என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

தன்னை நாடிவரும் அடியார்களுக்கு சோதனைகள் பல புரிந்து இறுதியில் சகல சுக போகங்களும் அருளும் அரியநாயகன் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு இன்றைக்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னரே ஆலயம் அமைக்கப்பட்டு மக்கள் வழிபாடு நடாத்தியதை அறியமுடிகின்றது. ஆரம்பத்தில் ஆலமரமொன்றின் கீழ் இருந்து அருள்பாலித்த விநாயகப் பெருமானுக்கு ஒருசில அடியார்களின் முயற்சியினல் சிறு ஆலயம் அமைக்கப்பட்டு புராண படனம் நிகழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அற்புதங்கள் பல புரிந்து வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கிய விநாயகப் பெருமானுக்கு ஆலயத்தை அழகுற அமைப்பதற்காக சிங்கப்பூரில் வாழ்ந்த இவ்வூர் மக்களால் பணம் சேகரிக்கப்பட்டு புதுப்பித்துக் கட்டப்பட்டது அத்தோடு இந்தியாவில் இருந்து பெரியவிக்கிரகம் ஒன்றும்கொண்டுவரப்பட்டுஸ்தாபிக்கப்பட்டது.

இதன்பின் வந்த காலங்களில் பொது மக்களிடம் திரட்டப்பட்ட பணத்தினலும் ஒருசில அடியவர்களினலும் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டது குறிப்பாக ஆலயமண்டபங்களுக்கு தூண்கள் கட்டப்பட்டு ஓடுகள் போடப்பட்டது, பரிவார மூர்த்திகளான வைரவர், முருகன் ஆகியோருக்கு தனித்தனியான ஆலயங்கள் அமைக்கப்பட்டது. மடப்பள்ளி, யாகசாலை மணிக்கூட்டுக் கோபுரம், மணி என்பனவும் நிர்மாணிக்கப்பட்டது.

விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் செய்யும் பொருட்டு ஆலயம் செப்பனிடப்பட்டது அடியவர் ஒருவரினல் மூலஸ்தானம் அர்த்தமண்டபம் என்பன கட்டப்பட்டு 9-2-1973ல் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து எம் பெருமானுக்கு காணிக்கைகள் பெருமளவு சேரத் தொடங்கின. புதிதாக வசந்த மண்பம், மடப்பள்ளி, களஞ்சிய அறை, அலுவலக அறை. குருக்கள் அறை, வாகன சாலை, சண்டேஸ்வரார் ஆலயம் என்பன அடியார்கள் சிலரினல் கட்டப்பட்டது.

மேலும் அடியவர்களினுல் மின்னெளியும் ஒலிபெருக்கியும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. பொதுமக்களினதும், தேர்த்திருவிழா உபயகாரர்களினதும் பெரு முயற்சியினுல் தேர்த்திருப்பணிச் சபையினரால் பல இலட்சம் ரூபாய் செலவில் எம்பெருமானுக்கு அழகிய சித்திரத் தேர் செய்யப்பட்டது இது ஆலய வரலாற்றில் முக்கியமான ஒன்ருகும்.

புதிய சித்திரத்தேரை மழை வெய்யில் என்பனவற்றில் இருந்து பாதுகாக்க வெளி நாடுகளிலும் உள்ளூரிலும் சேகரிக்கப்பட்ட பணத்தில் தேர்க் கொட்டகை கட்டப்பட்டது. மேலும் மிக அழகான முறையில் சில அடியார்களினுல் தீர்த்தக்குளம் அமைக்கப்பட்டதும் திருக்கதவு வைரவர் ஆலயம் முருகன் ஆலயம், புஞ்சமூக விநாயகர் ஆலயம் என்பன புதிதாக சிற்ப வேலைப் பாடுகளுடன் அமைக்கப்பட்டதும் ஆலயத்தின் உட்பிரகாரத்தைச் சுற்றி மண்டபம், மதில்கள் என்பன அமைக்கப்பட்டதும் ஆலயத்திற்கென அடியவர் ஒருவரினுல் மின் உற்பத்தியாக்கி அன்பளிப்புச் செய்யப்பட்டதும் ஆலய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியனவாகும்.

இவற்றைவிட காலத்துக்குக்காலம் அடியவர்கள் பலரினுல் ஆலயத்துக்கு தேவையான பல பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வந்துள்ளது புதிய பல விக்கிரகங்களும் காணிக்கையாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய திருப்பணிகள் யாவும் நிறைவேறி 10-2-1989 அன்று வினைகள் தீர்க்கும் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் வெகுசிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் தேரடிவைரவர், இலட்சுமி கோயில் என்பன அத்திவாரம் இடப்பட்டு துரித கதியில் கட்டுவேலை நடைபெற்றுவருகிறது. ஆலயத்திற்கென கல்யாண மண்டபம், அன்னதான மண்டபம் என்பன ஐங்கரன் சனசமூக நிலையத்தினரால் கட்டப்பட்டு வருகின்றது.

இத்தகைய திருப்பணிகள் சிறப்பாக நடைபெற பல அடியவர்கள் தனிப்பட்ட முறையிலும் உதவி புரிந்துள்ளார்கள் அவர்களை தனியே குறிப்பிட முடியாமைக்கு மனம் வருந்துகின்ருேம். இதே போல் வெளிநாடுகளில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் பணம் சேகரிக்க பலர் கஸ்ரப்பட்டுள்ளார்கள் இப்பொழுதும் கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கின்ருர்கள் அவர்களையும் தனியே குறிப்பிட முடியாமைக்கு மனம் வருந்துகின்றேன். ஆயினும் இவர்கள் அனை வருக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் அருட்பார்வை கிடைப்பதோடு மேலும் இவ் ஆலயத்தின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் பாடுபடுவோர்க்கும் குறிப்பாக ஆலயத்தினை சுத்தப்படுத்தி தினமும் அழகுற வைத்திருக்கும் பெண் அடியவர்களுக்கும் எம்பெருமானின் அருள் கிட்டுவதாக.

தொடர்ந்தும் அனைவரது பங்களிப்பும் எமது ஆலயத்திற்கு கிடைத்து மேலும் மேலும் சிறப்புற வளர்ச்சியடைந்து தன்னை நாடிவருவோர் குறைகளைக்களைவதோடு அனைத்து மக்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிபுரியும் ஸ்தாபனமாக மாற்றமடைய வேண்டும் அதற்கு அனைவரது உதவியையும் வேண்டுகின்றேன்.

*FOR ALL YOUR REQUIREMENTS IN*

**METALS (FERROUS & NON FERROUS)**

*STAINLESS STEEL, BRASS, COPPER, BRONZE, RODS SHEETS, TUBES, & COPPER TAPE ALSO SUPPLY COPPER BOAT AND SHEETING NAIL.*

**CONTACT**

# Y.S.G.P. PANDIAN & CO.

IMPORTERS & EXPORTERS

General Hardware & Non - Ferrous Metal Merchants

**246, Old Moor Street,**

**COLOMBO-12**

**SRI LANKA.**

PHONE: 25833, 548072

*WITH THE BEST COMPLIMENTS*

*OF*

# Travel Data

**AIRLINE TICKETS AGENT FOR VISA & PASSPORT**

18 — 1/10, MUDALIGE MAWATHA

(BAILLIE STREET)

**COLOMBO - 1**

Phone: 540302

---

*WITH BEST WISHES OF*

SOLE AGENT

## ASIA BIKE ▫ SPEED MASTER ▫ EASTERN

**GENTS & LADIES**

**Importes & Distributors whole sale**
**Retail Dealers in Bicycles, Bicycle spare & Hardware**

# Data Traders (Pvt) Ltd.

**93A, Dam Street, Colombo-12**

*For all yor requirements in*

MARINE SUPPLIES

Manila, Wire and Polyproplene Ropes

HARDWARE

General Hardware, G. I. Steam & Seamless Steel, Pipes & Fittings

METALS (FERROUS & NON-FERROUS)

Stainless Steel, Brass, Copper, Bronze, Rods sheets, Tubes & Copper Tape also H. S. Tool Steel.
We can also supply Copper Boat and Sheeting, Nail (Imported)

TOOLS

Hammers, Bench Vices, Pipe Wrenches Etc.

ASBSETOS PRODUCTS

Yarn, Plaited, Square or Round, Plain, Greased or Graphited Compressed Sheets, "Helite" Plain or Graphited, Reinforced or Non - Reinforced, Mill Board Sheet, Asbestos cloth & Tapes Etc. etc.

*CONTACT*

**Concord Hardware Enterprises**

261/A, OLD MOOR STREET,
COLOMBO - 12.

Phone: 5 4 7 2 4 3

*With the Best Compliments*

*of*

**UNI MARKETS**
**TRAVELS & TOURS**

**No. 140, FIRST FLOOR,**
**MAHA VIDYALA MAWATHA,**
**COLOMBO-13.**

**Telephone: 28945**

# நன்றியுரை

''எப்போதகத்து நினைவார்க் கிடரில்லை
கைப் போதகத்தின் கழல்''

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகருக்கு சப்தாதச குண்ட சகித புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் 10-02-1989 இல் ஆசாரியர் பிரதிஷ்டா பூசணம் கிரியா சிரோன்மணி ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் தலைமையில் பல ஆசாரியர்களின் உதவியுடன் மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

- இவ்வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த குருமார்கள், அர்ச்சகர்கள், அடியார்கள், தொண்டர்களுக்கும்.........
- சிறப்பாக ஒத்தாசை புரிந்த ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ ஸ்ரீநிவாச இராகுநாதக் குருக்களுக்கும் அவரது குடும்பத்தார்க்கும் மற்றும் சகோதரர்களுக்கும்.........
- நாதஸ்வர கானமழை பொழிந்த இணுவையூர் சண்முகநாதன் குழுவினர்க்கும்......
- சிறப்பாக ஒலி ஒளி அமைத்துத் தந்த திரு. மூர்த்தி (தம்பாட்டி) அவர்களுக்கும்.........
- கும்பாபிஷேக தினத்தில் அருளுரைகள் வழங்கிய புலவர் ஈழத்துச்சிவானந்தன், வித்துவான் பொன் அ. கனகசபை அவர்களுக்கும்.........
- ஆலயக் கட்டிடதூபி, நிர்மாண வேலைகள் செய்த திரு. R. S. தாகூர் அவர்களுக்கும், வர்ண வேலைகள் செய்த திரு. சோமடிலக் அவர்களுக்கும் ......
- கட்டிடவேலை செய்த திரு கோபாலகிருஸ்ணன் அவர்களுக்கும் மரவேலைகள் செய்த திரு. சடாசுவம் அவர்களுக்கும் உலோகவேலை செய்த திரு. முத்துலிங்கம் அவர்களும் ......
- வேண்டும் போதெல்லாம் முகம் மலர்ந்து பணம், பொருள், சரீர உதவிகள் புரிந்தவர்களுக்கும்.........
- கும்பாபிஷேக தினத்தில் அன்னதானம் தாகசாந்தி வழங்கிய ஐங்கரன் சனசமூக நிலையத்தினருக்கும்.........
- இன்னும் பல்வேறு வகையில் உதவி புரிந்த அனைவர்க்கும்.........

எமது உள்ளங்கள் நிறைந்த ''நன்றி''யைத் தெரிவித்து எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்

சு. செல்லத்துரை, ஐ. பரமேஸ்வரன்
(கும்பாபிஷேகக்குழு, ஆலயபரிபாலனசபை,
சார்பாக)


## உதவிய உள்ளங்களுக்கு......

யாம் செய்த பூர்வ புண்ணிய பலத்தால் அரியநாயகன்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகரின் மகாகும்பாபிஷேக நினைவாக வெளியாகும் இம்மலருக்கு

- ஆசியுரை வழங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் அவர்களுக்கும், பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்கும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும்
- வாழ்த்துரை வழங்கிய திரு வி. சிவசாமி அவர்களுக்கும்
- அனுபவ முதிர்வுடன் அருள் மணக்க கட்டுரைகள் வழங்கிய முதிய எழுத்தாளர்களுக்கும்
- இம்மலர் பொலிவுடன் வெளிவர விளம்பரங்களைத் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும்
- மலரைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய சித்திரா அச்சகத்தாருக்கும்
- இம்மலர் சிறப்பாக வெளிவர வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்த ஆலய அறங்காவலர் குழுவினர் கும்பாபிஷேகக் குழுவினர் ஆகியோருக்கும்

......எமது மனப்பூர்வமான நன்றியறிதலைக்கூறி விநாயகப் பெருமானின் திருவருள் கைகூட இறைஞ்சுகின்றோம்.

**கா. குகபாலன்**
(மலர் வெளியீட்டுக்குழு சார்பாக)



**வணக்கம்**

அம்பாள் துணை

இன்று மண்டலாபிஷேக பூர்த்தி காணும்
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் அருள்
விவசாயிகள், வியாபாரிகட்குக் கிடைக்கவேண்டி பிரார்த்திக்கும்

# சுகபானி ஸ்ரோர்ஸ்

214, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கொள்வனவாளர்களும்
பிரபல கமிசன் விற்பனையாளர்களும்

போன்: 23588
22566

---

ஆனைமுகனின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

யானைமார்க் குளிர்பானங்கள், பெப்சிகோலா முகவர்கள்

# சிவா ஸ்ரோர்ஸ்

179, சிவன்பண்ணை வீதி,

கொட்டடி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22072


ஓம் சாயிராம்

அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின்

"அருள்"

அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கும்

# சாயிஸ் சென்ரர்



தலைநகரில் தனித்துவமான இடத்தில் தங்குமிட வசதிகளுடன்
உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களுக்கும்
உங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கும்
நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய ஸ்தாபனம்

## சாயிஸ் இன்

156, மலிபன் வீதி,

கொழும்பு-11

தொலைபேசி: 35471

அச்சுப்பதிப்பு: சித்திரா அச்சகம், 664, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.